

உ
சிவமயம்

# சைவநீதி
# SAIVANEETHI



மலர 10 | விய - மார்கழி - தை | DECEMBER - JANUARY 2006 - 2007 | இதழ் 9, 10



விலை 25/=

உ


சிவமயம்

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

சைவநீதி

SAIVANEETHY

# சைவநீதி



மலர் 10 (விய — மார்கழி — தை) சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 9, 10

# நலம் தரும் பதிகங்கள்

## பதிகம் 19

## சிவகதியை அளிக்கும் பதிகம்

திருநாவுக்கரசப்பெருமானை சமணர்கள் கல்லுடன் கட்டிக் கடலில் இட்டபொழுது, இப்பதிகத்தைப் பாடியவாறே கரையேறினார். இல்வாழ்வு எனும் கடலில் அமிழ்ந்து விடாமல், 'முத்தி' எனும் கரையை அடைய உதவும் பதிகம் இப்பதிகமாகும். உறங்கப் போகும் பொழுதும், உறங்கி எழும் பொழுதும் நெடுவழிப் பயணம் மேற் கொள்ளும் பொழுதும் இப்பதிகத்தைப் பாராயணம் செய்யலாம். இறையருள் தோன்றாத் துணையாக அருள் செய்யும் என்பதில் சந்தேகம் வேண்டாம்.

திருச்சிற்றம்பலம்

பொது பண்: காந்தாரபஞ்மம்

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே. 1

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன் அஞ்சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டமில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே. 2

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்றுமில்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணி நின்றறுப்பது நமச்சிவாயவே 3

இடுக்கண் பட்டிருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோமல்லோம்
அடுக்கற் கீழ்க் கிடக்கினு மருளின் நாம்உற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே 4

வெந்த நீறருங்கலம் விரதிகட் கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக் கருங்கலம்திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சிவாயவே 5

சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கலால்
நலமிலன் நாடொறும் நல்குவான் நலம்
குலமில ராகிலும்குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே 6

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச் சென்றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சிவாயவே 7

இல்லக விளக்கது இருள்கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே 8

முன்னெறியாகிய முதல்வன் முக்கணன்
நன்னெறியே சரணாதல் திண்ணமே
அந்நெறியே சென்றங் கடைந்தவர்க் கெல்லாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே 9

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைத்தொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவாய பத்து
ஏத்த வல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே 10

திருச்சிற்றம்பலம்

# பொருளடக்கம்

1. சைவ வாழ்க்கை 3
2. சைவசமயப் பிடிப்போடு வாழ்வோம் 6
3. சைவக் கோட்பாடுகள் 8
4. பாம்பாட்டி சித்தர் 11
5. திருவருட்பயன் 15
6. புராணபடனம் 17
7. அடியார் கூட்டத்தில் சேர்ந்தால் அவன் அருட்பேறு கிடைக்கும் 20
8. கிராமியக் கலைகளில் கரகாட்டக்கலை 22

# சந்தேகம் தெளிதல்

**கேள்வி** : உலகில் உள்ள மற்ற மதங்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? இதில் உண்மையான மதம் எது என்று கண்டறிவது எப்படி? விளக்கவும்.

**பதில்** : உலகிலுள்ள எம்மதமும் பெரியோருக்குச் சம்மதமேயாகும். அந்தந்த மதத்தில் உள்ள குருமார்கள் கூறியபடி அந்தந்த மதத்தவர்கள் ஒழுக வேண்டும் ஒரு மதத்தில் ஒழுகுபவர் மற்றொரு மதத்தை நிந்திக்கக்கூடாது. ஒரு கல்லூரியில் பல வகுப்புக்கள் இருப்பதுபோல் பல மதங்கள் அமைந்திருக்கின்றன.

எல்லா மதங்களையும் தனக்கு அங்கமாகக் கொண்டு இராஜாங்கத்தில் விளங்குவது சைவ சித்தாந்தம். இதற்கு இறைவன் திருமொழிகளாகிய வேதாகமங்களே பிரமாணமானவை. இதனைத் தாயுமானார் மிகவும் அழகாகக் கூறுகின்றார்.

**'மயலறுமந்த் ரசிகைஷ ஜோதி டாதி**
**மற்றங்க நூல்வணங்க மௌன மோலி**
**அயல்வறச்சென் னியில்வைத்து ராஜாங் கத்தில்**
**அமர்ந்ததுவை திகசைவம் அழகி தந்தோ'**

சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.
- இதழ் நர்வாகிகள் -

# சைவ வாழ்க்கை

*பண்டிதர் K. வேலுப்பிள்ளை*

நாம் சைவ சமயத்தவர்கள் சிவனோடு ஒன்று சேர்க்குஞ் சமயம் சைவமாகும். சிவம் என்பது நன்மை இன்பம் எனப் பொருள்படும். (Welfare happiness). சமயம் ஒன்றுபடுதல் சேர்தல் என்னுங் கருத்துடையது. (Union, agreement) எனவே சைவர்கள் வாழும் சைவ வாழ்க்கை இன்ப வாழ்க்கை அல்லது நன்மை வாழ்க்கை யாகும். உலகில் நன்மையே எனக்கு என்றும் நிலையான இன்பத்தைத் தருவது. இதனால் நற்சிந்தனை உடையவர்களாகவும், நற்சொற் களை ஆற்றுபவர்களாகவும் வாழப் பயிற்சி பெறவேண்டும். இதனை விரிப்பதே இச் சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

ஆன்ம வர்க்கங்களை எல்லாம் சகோதரர் களாகக் கருதும் உணர்ச்சி நற்செயல்களின் அடிப்படையாகும். இதனாலேயே சிவனை உலக பிதாவாகவும், உமையை உலக மாதாவாகவும் சமய சாஸ்திரங்களும் அருட்பாக்களும் கூறு கின்றன. மணிவாசகரும் இறைவியையும் இறைவனையும் "அம்மையே அப்பா" என அழைப்பதைக் காண்க. நாமெல்லோரும் இறைவனின் பிள்ளைகள், சகோதரர்கள் என்ற உணர்ச்சி உண்டாக எல்லோரிடத்தும் அன்புப் பிணிப்பு உடையவர்களாகித் தீச் செயல்களற்று நற் செயல்களையே ஆற்றுவோம்.

அறநூல்கள்: இச் சகோதரத்துவக் கொள்கை எமது கடமைகளையும் பிறர் உரிமைகளையும் மதிக்க வழிகாட்டுகின்றது. இவற்றை விரித்து உணர்த்துவன அறநூல்கள். அறநூல்களுள் எல்லாந் தலைசிறந்து விளங்குவது தெய்வப் புலவரின் திருக்குறளாகும். இன்னும் நாலடியார் ஆத்திசூடி போன்ற நீதி நூல்களையும் கற்க வேண்டும். இந்நூல்களைக் கற்ற மாத்திரத்தே நாம் அறிவோராக, அறவோராக முடியாது. கற்ற கல்வி உணர்ச்சியோடு கலந்து அறியாமை கலந்து அறிவாகவும், அறிவு செயலாகவும் மாறவேண்டும். உலக வாழ்க்கையிலே பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. அவற்றில் நாம் செய்ய வேண்டிய அறங்கள் ஒன்றோ டொன்று முரணாகின்றன. உதாரணமாக நன்றியறிதல் என்பது ஒரு தலையாய அறம். இதனால் நமக்கு நன்மை செய்த ஒருவருக்கு நடுவு நிலை மாறி அவர் பட்சம் நிற்கலாமா என்பது ஒரு சிக்கல். இதற்குப் பரிமேலழகர் கூறுவதை நோக்குக.

**நடுவுநிலை என்பது நன்றிசெய்தார் மாட்டு**
**அந் நன்றியினை நினைத்த வழிச் சிதையுமன்றே?**
**எவ்விடத்துஞ் சிதையலாகாது என்றற்கு,**
**செய்நன்றி அறிதலின் பின் நடுவு நிலைமை**
**வைக்கப்பட்டது.** என்பர்

இது போன்ற சிக்கல்கள் வாழ்க்கையிற் பல ஏற்படும் அவற்றைத் தம் கூரிய சிந்தனையால் அறுக்க வேண்டும்.

ஐம்புல அடக்கம் : இரண்டாவதாக ஐம்புல அடக்கம் நற் செயல்களுக்கு இன்றிய மையாதது. புலனடக்கத்திற் பயிற்சி பெறு வதற்காகவே சைவர்கள் விரதங்களை அனுட்டிக்கிறார்கள். மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டே விரதங்களால் உண்டி சுருக்குகின்றோம். மாசிப் பனியிலே நித்திரை விழிக்கின்றோம். மார்கழிக் குளிரில் வைகறை யில் எழுந்து நீராடுகின்றோம். இச் செயல்களை மேற் கொள்ளுவதனால் நமக்கு வருந்துன்பங் களைப் பொறுத்து எமது கருவி கரணங்களைத்

**சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை**
**நேரா நிரந்தவர் நட்பு** **821**

அகத்தில் கலவாமல் (உதவி செய்யும் நண்பர்போலிருந்து தாக்குவதற்குத் தக்க சமையம் வரும்வரை) புறத்தில் கலந்து பழகுபவரின் நட்பு, சிறந்த சமையம் வாய்த்த போது தாக்குவதற்கு உதவும் பட்டடை போன்றதாகும். (பட்டடை - அடைகல் : தாங்கு பலகை)

தூயவாக்கி அவற்றைப் பிறர் சேவை செய்வதற்குத் தயாராக்குகின்றோம்.

*உணர்ச்சிகள்* : மூன்றாவதாக அறத்திற்குப் பகையாகிய உணர்ச்சிகளை அடக்கிப் பயில வேண்டும். உணர்ச்சிகள் அறிவை மயக்குவன. உணர்ச்சிகளுட் சில உடன் எழுந்து உடன் மறைவன.

சினம் இதற்கு ஓர் உதாரணம்; இதனைப் பெரும்பாலும் பின்போடுவதால் நீக்கலாம். மூண்டெழுந்து வரும் சினச் செயலைப் பின்போட, அவ்வுணர்ச்சி வலுக் குறைந்து அறிவு மேற்கொள்கிறது. அதனால் எமதுள்ளம் அச் செயலின் நய நட்டங்களை ஆராய்ந்து அதனைத் தவிர்க்கின்றது.

அடுத்ததாக அழுக்காறு போன்ற சில உணர்ச்சிகள், நெடுங்காலம் நின்று பெருங் கெடுதி விளைப்பன. இவை மனிதனுடைய உளத்தூய்மையைக் கெடுப்பதோடு அவனுடைய இரத்தத்தையும் உறிஞ்சி அவனை மெலிவிக் கின்றன. இவற்றை நீக்க நற்சிந்தனையைத் தூண்டும் நூல்களை வாசித்தலும், பெரியோர் சக வாசமும், அருட் பாக்களை உணர்ச்சியோடு ஓதலும், இறைவழிபாடும் இன்றியமையாதன. தன் செயல்களை இடையிடையே எடுத்து இவ் வுணர்ச்சிகளின் சாயை தானும் கலந்திருக்கிறதோ எனச் சீர்தூக்கி ஆராய்தலும் முக்கியமாகும்.

நற் பழக்கங்கள் : பழக்கங்கள் முதலாம் வயதிலிருந்தே ஆரம்பித்து விடுகின்றன என்பது அகநூலார் கருத்து.

'தொட்டிற் பழக்கம் சுடு காடு மட்டும்'

என்னும் பழமொழியும் இதனை வற்புறுத்துகிறது. இதனால் குழந்தை வளர்ப்பு எவ்வளவு பொறுப்பு வாய்ந்ததென்பது புலனாகும். பெற்றோர் அறக் கொள்கை உடையவர்களாக இருந்தாற் பிள்ளைகளும் அறக் கொள்கை உடையவர்களாக வளரு வார்கள். நல்ல சூழலும் நற்பழக்கங்கள் வலுவடைவதற்குப் பெரிதும் உதவுவன. இதனால் ஒருவனுக்கு மாணவப் பருவத்திலே நல்ல நண்பர்கள் கிடைத்தலும் நல்ல ஆசிரியர் கிடைத்தலும் பூர்வ புண்ணியமே.

குமாரப் பருவத்திலே (ஏறக்குறைய 16 - 24 வயது) ஒருவன் கொள்கைகளைத் தேடி அலைகிறான் என்பது அகநூலார் கருத்து. தன் வாழ்க்கையின் இலக்கைத் தீர்மானிக்கும் காலமும் இதுவே. ஒருவன் அரிச்சந்திரனாக வோ, காந்தியடிகளாகவோ, குமணவள்ள லாகவோ, ஆபிரகாம்லிங்கனாகவோ, லூயிபாஸ்ரர் ஆகவோ மாறுவது இப்பருவத்திலேயே இப்பருவத்திலுள்ளார்க்குப் பல பேரறிஞர்களின் சரிதைகளை வாசிக்க வாய்ப்புக் கொடுத்தல் அவர்கள் வாழ்க்கையை வளப்படுத்தும். நல்லாரைக் காண்பதாலும், நல்லார் சொற் கேட்பதாலும் நல்லாரோடிணங்கி இருப்பதாலும் உச்சப் பயனடையும் காலமும் இதுவாகும். ஆகையால் பெற்றோரும் ஆசிரியர்களும் தம் பிள்ளைகளின் சூழ்நிலையை இப்பருவத்திற் சிறப்பாகக் கவனிக்க வேண்டியவராவர்.

*கொள்கைகள்* : ஒருவனுடைய வாழ்க்கை குறித்த சில கொள்கைகளாற் கட்டுண்டு ஒழுங்கு பெறுமாயின் அது வாழ்வதற்குத் தகுதி உடையது. கொள்கையற்ற வாழ்க்கை காலகதியிற் சீர்குலையும், ஒருவன் சீரான கொள்கைகளிலும் பழக்கங்களிலும் சுவை காண வேண்டும். கொள்கைகளுக்கமைதல் ஆரம்பத்திலே பல கடினங்களையும் துன்பங்க ளையும் கொடுக்கும். இவற்றை உவப்போடேற்று கொள்கைகளிற்றவறாது பழகிக் கொள்வோ மானால் ஈற்றில் அது தரும் பயன் அளவற்றது. நாம் குழந்தைகளாய் நடக்கப் பழகும் போது எத்தனை தரம் வீழ்ந்தோம்; எத்தனை தரம்

> இனம்போன்று இனம் அல்லார் கேண்மை மகளிர்
> மனம்போல வேறு படும். 822
>
> இனத்தார் போலவே இருந்து, உண்மையில் இனத்தார்க்கு உரிய அன்பில்லாத வஞ்சகர் நட்பு, விலைமகளிர் மனம் போல (உள்ளொன்றும் புறமொன்றுமாக) வேறுபடும்.

கண்ணீர் விட்டோம். இப்பொழுது அப்பயிற்சியால் எவ்வளவு நன்மை அடைகின்றோம். அதுபோலவே கொள்கைகளைக் கடைப்பிடித்தல் ஆரம்பத்திற் கடினமும் துன்பமுமாயினும் அதன் பயனை நோக்க எவ்வளவோ விலையானது. எத்தனை பெரியோா் தம் கொள்கைகளை நிலை நாட்ட உயிரையும் அர்ப்பணித்துள்ளனா்.

**வழிபாடு :~** இறைவனையும் இறைவனடியார்களையும் வழிபடுதல் நல்வாழ்விற்குப் பெரும் துணைபுரிவதாகும். எல்லா நன்மைகளும் பூரணத்துவம் பெற்றவரே இறைவன். இறைவனைத் தியானம் செய்தல் மூன்று வகைகளிலே பிழைச் செயல்களை நீக்குகின்றது. முதலாவதாக நாம் எவரைப் பெரியவராக மதித்து நடக்கிறோமோ அவருடைய குணங்கள் எம்மை அறியாமலே எம்மை வசப்படுத்துகின்றன, தீச் செயல்கள் தாமாகவே விலகுகின்றன.

இரண்டாவதாக இறைவனின் பெருமையை மதிக்க எமது சிறுமையை உணருகின்றோம். இதை உணரவே யான் எனது என்னும் அகங்கார மமகாரங்கள் கெடவே தீச் செயல்களும் நீங்குகின்றன. மூன்றாவதாக இறைவனின் பெருமையை நோக்க உலகப் பொருளின் சிறுமையை உணர்வோம். இதனால் எமக்கு உரிமையில்லாத பிறர் பொருளில் ஆசையற்றுப்போக, பிழைச் செயல்களுக்கு மிடமில்லாது போகின்றது. தொடக்கத்திலே இறைவனைத் தியானித்தல் கடினமாயும் உவர்ப்பாயுமிருப்பினும் பயிலப் பயில அது உலகப் பொருள்கள் எல்லாவற்றினும் இனிதாகி விடும்.

இறைவனை வழிபடுதல் போலவே சைவர்கள் சிவனருள் பெற்ற அடியார்களை வழிபடுதலும், அவர்களின் சரிதைகளை வாசித்தலும், கேட்டலும் சிந்தித்தலும், அவர்கள் பாடிய அருட் பாடல்களை உணர்ச்சியோடு ஓதுதலும் இன்றியமையாதன. சிவனடியார்கள் எம்மைப் போலவே ஆன்மாக்களாகவும், இறைவனைப் போல அருள் நிரம்பியவர்களாகவுமிருத்தலின் இறைவனுக்கும் எமக்கும் இடைநின்று இறைவனுடைய கருணை வெள்ளத்தில் எம்மை ஆழ்த்த வல்லவர்கள்.

அடுத்ததாக ஒரு நகர் காவலனுக்கு அவனுடைய சிறப்புடையும் ***(Uniform)*** ஒரு நீதிபதிக்கு அவருடைய உத்தியோக உடையும் எவ்வாறு அவரவர் கடமை உணர்ச்சியில் விழிப்பு நல்குமோ அதுபோலச் சிவ சின்னங்களாகிய விபூதி உருத்திராக்கம் அணிதலும் எமது சைவ வாழ்க்கையில் எம்மை விழிப்புடையராக்கும்.

தியாக உணர்வு: புகழ் வாழ்விற்கு எவ்வாறு பெருமுயற்சி அவசியமோ அவ்வாறு புண்ணிய வாழ்விற்குத் தியாகம் வேண்டப்படும். ஒருவன் தனக்கிருக்கும் உணவைப் பசித்து வரும் ஒருவனுக்குக் கொடுக்கும் போது தன் உடல் நயத்தைத் தியாகம் செய்கின்றான். அவன் ஒரு அபாயமான தொற்று நோயால் வருந்துபவனுக்கு உதவி செய்யும் போது தன் உயிரையும் தியாகம் செய்கின்றான். தன்னுடைய நேரத்தையும், ஆற்றலையும் பிறருக்காகத் தியாகஞ் செய்யுமொருவன் இலகுவில் பிறருக்குத் தீச்செயல்கள் செய்ய உந்தப்படமாட்டான். ஆகையால் தியாக உணர்ச்சி சைவ வாழ்விற்கு அவசியம் வேண்டப்படுவது.

எனவே சைவர்களாகிய நாம் சைவ வாழ்வு வாழ வேண்டும். சைவ வாழ்வென்பது ஒரு அன்பு நெறியாகும்.

**'இன்பில் இனிதென்றல் இன்புண்டேல் இன்றுண்டாம்' அன்பு நிலையே அது'** என உமாபதி சிவமும்
**'அன்பு சிவமென்பது இரண்டு என்பர் அறிவிலார்.
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்.'**

எனத் திருமூலநாயனாரும் ஓதினார். இவ்வன்பு நெறியால் நன்மை வாழ்வு வாழ்ந்து பேரின்பம் அடைவோம்.

**பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது** 823

பல நல்ல நூல்களைக் கற்ற போதிலும், அவற்றின் பயனாக மனம் திருந்தி உண்மை நண்பராகும் தன்மை, உள்ளன்பினால் சிறவாதவர்க்கு இல்லை.

# சைவசமயப் பிடிப்போடு வாழ்வோம்

பேரறிஞர் முருகவே பரமநாதன்

சென்ற இதழின் தொடர்ச்சி.....

**சுவாமி பாதிரியார்**

விவேகானந்தரே யாழ்ப்பாணத்தவர் சமயம் சைவம் என்று கூறியுள்ளார். விவேகானந்தர் சித்தாந்த உண்மையை J.M. நல்லசாமிப் பிள்ளை மூலமறிந்து வியப்பெய்தினார்.

1906 இல் சேர் பொன் இராமநாதன் அவர்கள் அமெரிக்கா சென்ற கப்பலில் அவரைச் சந்தித்து உரையாடிய அமெரிக்கர் ஒருவர் சேர் நீங்கள் இந்து சமயத்தவரா? என்று கேட்டாராம். அதற்கு நேரிற் பதிலளித்த இராமநாதன் நாங்கள் சிவனை வழிபடுபவர்கள், எங்கள் சமயம் சைவம். ஆனால் பிறநாட்டார் எங்களை இந்துக்கள் என்று சொல்லிக் கொள்கின்றார்கள். அதற்காக நாங்கள் இந்துசமயத்தவர் என்ற பெயருக்குரியவர் ஆகமாட்டோம் என்றாராம். திருமதி லீலாவதி இராமநாதன் Western Pictures to the Eastern Students என்ற பெயரில் எழுதியநூலில் இன்றுங் காண உள்ள செய்தியிது. சனாதன சைவ விளக்கம் பக் - எட்டாவது பிரிவில் கூறப்பட்டுள்ள இந்திய அரசமைப்புச்சட்டத்திலே 22 மொழிகளில் எந்தமொழியிலும் இல்லாதது இந்து என்ற சொல் ஆகும். 1884 இல் ஆங்கிலேயர்களினால் முதல்குடிக்கணக்கெடுக்கும் போது இந்து என்ற சொல் வந்தது எனப் பெரியார்கள் குறிப்பிடுவர். உயர் நீதிபதியொருவர் மதம் என்ற சொல்லை இப்போது நாம் புரிந்து கொள்ளும் பொருளின் படி இந்துவியஸ் என்பது ஒருமதம் இல்லை. அச்சொல் இந்திய மூலத்தைக் கொண்டதன்று. அல்லது இந்துக்கள் என்பவர்களால் அச் சொல் தங்களின் மதத்திற்குப் பெயராக ஒரு போதும் பயன்படுத்தப் பெற்றதே கிடையாது என்று சொல்லியுள்ளார். ஈழவளநாட்டில் பொது வாகவும் யாழ்ப்பாணத்திற் குறிப்பாகவும் வழங்கும் சனாதன (என்றுமுள) சைவக் கட்டு மானம் பெலவீனப்பட்ட இந்து என்ற பிரயோகம் ஒரு காரணியாம். எனவே எம் சமயம் சைவமே யென்ற உறுதியை நிலை நாட்டுவோமாக.

## பிறமத ஊடுருவலால் சைவம் திசைமாறுவதா?

ஞானசம்பந்தர் பரசமயகோளரியெனப் பெயர்பெற்றார். காரணம் அவரும் நாவுக் கரசரும் வாழ்ந்த காலகட்டத்தில் பௌத்த சமணத் தாக்கம் சைவத்தை வெகுவாகப் பாதித்தது. அதையெதிர்த்து வெற்றிகண்டனர். வேத நெறிதழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க அவதாரம் செய்தவர்கள் இவர்கள். பின்னர் போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேயர்படையெடுப்பால் சைவம் தமிழகத்திலும், ஈழவளநாட்டிலும் நலிவுற்ற போது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வருகை மீளவும் சைவத்தை நிலைநாட்டியது. இந்தக் கிறீத்தவப் பரம்பல் வாழைப்பழத்தில் ஊசியேற்றுவது போல இன்றும் உள்நாட்டிலும் நிகழ்வது வெளிப்படை. இதைவிட வட பாரதத்தில் இருந்து உலாவரும் சிலரால் சைவநெறி மிகவும் பாதிக்கப்படுவது வெளிப் படை. அண்மைக் காலங்களிற் சைவாலயங்கள் கிறித்தவப் பெருநாட்களைக் கொண்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

முகத்தின் இனிய நகாஅ அகத்துஇன்னா
வஞ்சரை அஞ்சப் படும் 824

காணும் போதெல்லாம் முகத்தில் இனிதாகச் சிரித்து மனத்தில் எப்போதும் தீயவராகிய வஞ்சகருக்கு அஞ்சி விலகிக் கொள்ள வேண்டும்.

## சைவசமய கலாசாரப் பண்பாட்டுச் சீரழிவுகள்

வைதீக சைவத்திலே பிறந்து வளர்ந்தவர்கள், காவடியெடுத்தவர்கள், அங்கப்பிரதட்சிணம் செய்தவர்கள் நத்தார்க் கொண்டாட்டம் கொண்டாட நிதிதிரட்டுபவர், வீட்டிலே நத்தார் மரம் வைத்துக் கொள்வதிற் தீவிரப்படுவர். யோகர் சுவாமிகளில் மிக்க ஈடுபாடுள்ளவரின் பரம்பரை சமயம் மாறியதாகச் சொல்கிறார்கள். நத்தார் வாழ்த்து புத்தாண்டு வாழ்த்துச் சொல்வர். காட் அனுப்புவர். தைப்பொங்கலுக்கோ, சைவப்புத்தாண்டுக்கோ அவர்கள் அப்படி நடப்பதில்லை. திருமணம் முடிந்தபின் கேக் வெட்டி விழாவெடுப்பர். ஈதெல்லாம் பிறசமயத் துக்குப் பச்சை விளக்குக் காட்டியதன் எதிர்விளைவுகளே.

பலர் மேலைநாட்டார் புத்தாண்டை வாழ்த்திப் பாடல்களை சைவச் சஞ்சிகையில் வெளி யிடுவர். திசம்பர் 25, திசம்பர் 31, ஜனவரி 1, ஆந்தேதிகளில் சைவாலயங்கள் திறந்திருக்கு மென விளம்பரம் செய்வர். இதன் நோக்கு என்ன. ஜனவரி முதலாந்தேதியில் கைவிஷேசம் வழங்கும் ஆலயங்கள் சைவப் புதுவருடத்திலும் கைவிசேடம் கொடுப்பர். ஒரு எறியில் இரு மாங்காய் வருமானமே இலக்கு. இவை சைவா லயங்களா, வேற்று மத ஆலயங்களா. சிலர் ஆங்கிலப் புத்தாண்டு நாளை குடும்ப நலம் பேணும் நாளெனப்பிரகடனம் செய்து கொள்வர். இவ்வண்ணம் எத்தனை யெத்த னையோ சமயப் பிறழ்வுகள் தமிழ் நாட்டிலும் உயர் சைவசமயப் பீடங்கள் ஆங்கில புத்தாண்டைக் கொண்டாடி கைவிசேடம் வழங்கி வாழ்த்து வழங்கியதாக ஊடகங்களும், அவர்களின் சஞ்சிகைகளும் தெரிவிக்கின்றன. இந்தக் கலாசார மீறலை எந்தச் சைவ சமயியும் ஏற்கமாட்டார். நாம் இவற்றை ஒதுக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

புதிய பரம்பரையினர் தைப் பொங்கலா, ஜனவரிமுதலாந்தேதியா, சித்திரை முதலாந் தேதியா நம் புதுவருடம் எனக் கேட்கின்றார்கள். இதற்குச் சைவசமயம், சமயிகள் பதிலிறுக்கக் கடமைப் பட்டவர்கள் விவேகானந்தர் சொன்னார். கிழக்கே உள்ளவர்கள் மேற்கே சென்று நல்லவற்றைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஆனால் கிழக்கில் உள்ளவர்களாகவே வாழுங்கள்.

மேற்கேயுள்ளவர்கள் கிழக்கே போங்கள் ஆனால் மேற்கேயுள்ளவர்களாகவே வாழுங்கள் என்று இது நமக்கும் சாலப் பொருந்தும்.

எனவே நாம் சைவசமயப் பற்றுறுதியோடு வாழ்வோம்.


**சைவநீதி மாத இதழ்**

பெறுமதி விபரம்

**தனிப் பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது** US$ 15

***சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.***

சந்தா அனுப்பவேண்டிய முகவரி

***C. Navaneethakumar,***
*No. 4, Somagiri Place,*
*Colombo - 06.*
*Sri Lanka.*
*Tel : 2360406*
*Tel : 0779008286*


**மனத்தின் அமையா தவரை எனைத்துஒன்றும்**
**சொல்லினால் தேறற்பாற்று அன்று**
**உள்ளத்தால் தம்மோடு பொருந்தாதவரைச் சிறிதளவும் அவர் சொல்வதைக் கேட்டு நம்பித் தெளிவது முறையன்று**

825

# சைவக் கோட்பாடுகள்

'சமய போதனா ரத்தினம்' வித்துவான்
தா. குருசாமி தேசிகர் - மதுரை

## முன்னுரை

தமிழர்கள் பலரும் சிவத்தை முழுமுதலாகக் கொண்டவர்கள். அவர்கள் சிவப்பரம்பொருளை வழிபட்டு வாழ்ந்து காட்டிய நெறிகள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் பரக்கக் காணப்படுகின்றன. "வழிபடு தெய்வம் நிற்புறங்காப்ப" - என்பது தொல்காப்பியம்.

## வாழ்வின் உயிர்

ஒழுக்கம் - உயிர் என்பது தமிழர் கோட்பாடு. இக் கோட்பாட்டின் ஒழுகலாறுகளைப் பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம், முதலியவை கிளந்து கதையாக ஓதுகின்றன. சிவத்தை முழுமுதலாகக் கொண்டவர்கள் வாழ்ந்து காட்டிய நெறியை முறைப்படுத்தினால் அதுவே சைவக் கோட்பாடுகள் என்னும் பாடமுறையாகும்.

## மரபு

மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும் என்று தொல்காப்பியம் கூறுவதால் கோட்பாடுகளாகிய மரபுகளே ஓர் இனத்தின் - உயிர்நாடி உய்யும் வழியும் அதுவே.

## முதற்கோட்பாடு

சைவநெறியின் முதற்கோட்பாடு குரு வழிபாடு. இதனை இளங்கோவடிகள் "தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்" என்பர். வென்றிலேன் புலன்களைந்தும் வென்றவர் வளாகந் தன்னுள் சென்றிலேன்" என்பர் அப்பர். திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரை வழிபட்டு சிவிகை ஊர்ந்த பண்பாடே இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

## நான்குவகை

இறை, உயிர், தளை என்ற மூவகைக் கோட்பாடு நுணுக்கமாக ஆராயப்பட்டு, சான்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட பொருள் நான்கு என வகுத்தனர்.

1. இருவினைகளைச் செய்கின்ற உயிர்கள்.
2. இருவினைகள்
3. அவற்றின் பயனாகிய உயிர்களைச் சாரும் இன்ப துன்பங்கள்.
4. வினைப் பயன்களை நுகரச் செய்பவனாகிய இறைவன் இந்நான்கு பொருளையும் சாக்கிய நாயனார் புராணத்துள் வைத்து விளக்கப்படும் கோட்பாடு அறியத்தக்கது.

செய்வினையும், செய்வானும்
அதன்பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும்
விதித்த பொருள் எனக் கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
அல்லவற்றிற் கில்லை என
உய்வகையாற் பொருள் சிவன்
என்றருளாலே உணர்ந்தறிவார்.

இதன் சாராம்சமாக,

செய்வானும் செய்வினையும் சேர்பயனுஞ் சேர்ப்பானும்
உய்வா னுளனென் றுணர்.

---

நட்டார் போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும் 826

உண்மை நண்பர் போல் நன்மை தரக்கூடியவைகளைச் சொன்னாலும் பகைவர் சொற்கள் நன்மை தராமை விரைந்து உணரப்படும்.

என்றார் உமாபதியார் திருவருட்பயன் நூலில்.

## மலம் நீக்கும் வாயில்கள்

ஆணவம், கன்மம், மாயை என்பன கோட்பாடு, இவை நீங்க கடவுள் வழிபாடுதான் துணை. பஞ்சமலம் என்பதும் வழக்கு.

**தொழுவார்கள் தம் மும்மை மாமலங்களற**
**வீடருள் தில்லை மல்லலம்பதி.**

எனவும்,

**தொல்லைவினை ஆசுடைய மலமூன்றும் அணையவரும்**
**பெரும்பிறவி மாகதனை விடக்கழித்து.**

எனவும்,

**மருள்பொழி மும்மலம் சிதைக்கும் வடிச்சூலம்**

என்றும் பெரிய புராணம் பேசும். இதன் மூலம் சூத்திரம் - தேவாரம் கூறுகிறது.

**'வினையாததோர் பரிசில் வருபசு**
**பாசவேதனை ஒண்**
**தளையாயின தவிர அவ்வருள்**
**தலைவனது சார்பாம்.'**

என்று சம்பந்தர் அருளுவர்.

## உயிர்கள் அடிமை

திருவருளுக்கு அடங்கி நடத்தலே மெய்யுணர்வுடையார் கோட்பாடு.

**எப்பொருளும் ஆக்குவான் ஈசனே,**
**எனும் உணர்வும்**
**அப்பொருள்தான் ஆளுடையான்**
**அடியார்கள் எனும் அறிவும்.**

என்பது பெரியபுராணம்

பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம் - என்பது சைவக் கோட்பாடு. இதனைச் சுந்தரர் வரலாற்று நுட்பமும், திருத்தொண்டத் தொகையும் உணர்த்தும். அடிமை கேட்டு உவப்பார், ஆரூரில் அம்மானுக்கு அன்பர் ஆவர் - என்பது கோட்பாடு.

## குரு உபதேசம்

உபதேச மொழிகளைத் தொல்காப்பியம் செவியறிவுறூஉ என்று கூறும் அனுபவமுடைய குருநாதர், தேசிகர் எனப்படுவார். அவர் வாயிலாக மெய்ப்பொருளை உணர்ந்தவர் மீண்டும் வாரா வழியைப் பெறுவர்.

**கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றீண்டு வாரா நெறி**

என்ற குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரையில் குரு உபதேசம் விளக்கப்படுகிறது. இக்கோட்பாட்டைப் பரஞ்சோதி முனிவர்,

**கரவிலாத பேரன்பிலுக்கு எளிவருங் கருணைக்**
**குரவனார் அருளின்றிக் கொடியவெம்பாசம்**
**புரையில் கேள்வியால் கடப்பது புணையினாலன்றி**
**உரவுநீர்க் கடல் கரங்கொண்டு நீந்துவது ஒக்கும்.**

## ஊழ் வினையை வெல்லலாம்

விதியை இறையருளால் புறங் காணலாம் என்பது சைவக் கோட்பாடு. திருவாஞ்சியம் சுந்தரர் தேவாரத்தில் - "ஒருவனார் அடியாரை, ஊழ்வினை நலிய ஒட்டாரே" என்று வழியருள்வார். ஊழையும் உப்பக்கங் காண்பர்" என்று குறள் வழங்கும் அறவுரை, தேவாரத்தில் தெளிவு வழங்கப்பட்டு வழியுங் கூறப்படுகிறது. ஆதலால்தான் அருணகிரியார் திருப்புகழில், திருக்குறளை விடத் தேவாரம் உயர்ந்தது என்று "முப்பால் செப்பிய கவிதையின்

**சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்**
**தீங்கு குறித்தமை யான்** 827

வில் (வளைதல்) வணக்கம் தீமை செய்தலைக் குறித்தமையால் பகைவரிடம் காணப்படும் பொய்யான பணிவு வணக்கம் நன்மை செய்தலைக் குறித்ததென்று நம்பிவிடக்கூடாது.

மிக்காரத்தினை" என்று போற்றி வணங்குவார். கந்த புராணத்துள் மார்க்கண்டேயன் வரலாறு, சிவனருளால் ஊழ் வினையை வெல்லலாம் என்ற கோட்பாடு தெரிவிக்கிறது.

## தாழ்மை

சைவக் கோட்பாட்டில் பணிவு போற்றப் படுகிறது. அது தாழ்மை. தாழ்வு எனப்படும். பணியுமாம் பெருமை என்ற வள்ளுவர் வழி, தமிழரின் சாத்திர நூலில்

**தாழ்வு எனும் தன்மை கொண்டு**
**சைவமாம் சமயம் சாரும்**
**ஊழ்பெறல் அரிது.**

என்று உணர்த்தி உயர்த்தப்படுகிறது.

## அறமே வாழ்வு

செயற்பாலது அறமே என்ற சைவக் கோட்பாடு, அடியார்களின் பலதிற வாழ்வு நிலைகளில் அறம் சிவ சம்பந்தம் பெற்று, அது ஒரு கோட்பாடாக நிற்பதை நாமறிய வேண்டும், பதி புண்ணியம் அறம் என்பது சைவக் கோட்பாடு 63 நாயன்மார்களின் வரலாறு இதனை உணர்த்தும்.

## திருவடிச் சார்பு

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்தலே முடிந்த சைவக் கோட்பாடு, இதற்கு முன் வாயிலாக குருவருளும், உள்வாயிலாக அடியார்கள் கூட்டுறவும், முடிவிடமாகத் திருக்கோயில்களும் துணையாக உள்ளன என்பதும் இம்மூன்றையும் நீக்கிய வாழ்வில், திருவடிச் சார்பு கூடா என்பதும் சைவக் கோட்பாடு, இறைவனடி சேர் முத்தியே நிறைவான வாழ்வின் பயன் என்பது சைவ சமயக் கோட்பாடாகும்.

## ஆய்ந்த வாழ்வு

இறை, உயிர், தளை இம் மூன்றையும் ஆய்வதே சைவக் கோட்பாடு. இம்மூன்று தன்மைகளையும் தாம் தமிழகம் வந்த பின்பேயே உணர்ந்ததாகவும், முன்பே தெரிந்திருந்தால், என் சிகாகோ சமய உரை மேலும் சிறப்புற்றிருக்கும் என்பதும் விவேகானந்தர் வரலாற்றுச் செய்தியாகும். பசு, பதி, பாசம் இம் மூன்றையும் ஆய்ந்து உணர வழி காட்டும் அறிவாலயங்களே ஆதீனங்களாகும். அவ்வாதீனங்களே அருள் ஆலயங்களாகும். ஆதீனங்களை அணுகாமல் அருள் வரலாற்றை ஆய முடியாது என்பது சுந்தரர் முடிவு. அறிவாலயங்கள் அருள் உள்ள இடங்களை வழிகாட்ட உதவ வேண்டும். ஆதலால் சைவக் கோட்பாட்டில் குரு பீடங்களே முதல் மரியாதைக்குரியதாகின்றன.

## முடிவுரை

நிறைவாக சைவக் கோட்பாட்டை வரிசைப்படுத்துவோம்.

1. குருவே துணையாய் திருவருள் வரும்.
2. சைவக் கோட்பாடு நான்கு
3. விதியை வெல்ல சிவ வழிபாடே துணை
4. உயிர்கள் அடிமையே இறைவனுக்கு
5. பெருமை பணிவுதான்
6. மருள் நீங்க அருள் வழி நிற்றல்
7. முப்பொருள் சைவக் கோட்பாடு
8. குரு உபதேசமே பாச நீக்கம் செய்யும்
9. இறைவன் திருவடிச் சார்பே முடிந்த முடிபு
10. சிவஞானம் முற்ற ஒன்றும் இரண்டுமறத் தோய்தலே சைவ சமயக் கோட்பாடுகளாகும்.

**தொழுதகை உள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்**
**அழுதகண் ணீரும் அனைத்து** **828**

பகைவரின் குறிப்புணர வல்லவர்க்கு அவர் கும்பிட்ட கைக்குள்ளும் கொலைக் கருவி மறைந்திருக்கும் அவர் அழுது வடித்த கண்ணீரும் அத்தன்மையதே.

# பாம்பாட்டி சித்தர்

இந்திரா சௌந்தர்ராஜன்

சித்தர்களில் போகர் எவ்வளவு பிரபலமோ அவ்வளவு பிரபலமானவர், பாம்பாட்டி சித்தர்.

காரணப் பெயர்கள் சாதாரணமாக மனதை விட்டு அகலவே அகலாது. அதிலும், படையையே நடுங்கச் செய்யும் பாம்பினை ஆட்டி வைப்பவர் என்பதால் ஒரு பிரமிப்போடு கூடிய பார்வை இந்த சித்தர் மேல் எல்லோருக்கும் உண்டு.

இவரின் தொடக்கம் மிகச் சாதாரணமானது. ஜோகியர் என்னும் மலைக்குடியர் இவர். பளியர், ஜோகியர், படுகர், வடுகர், வட்டகர் என்று அந்த நாளில் மலைகளில் வசிப்பவர்களுக்குப் பெயர்கள் இருந்தன. இவர்களில் ஜோகியர்கள் பாம்பு பிடிப்பதில் சிறந்தவர்கள். இன்றைய இருளர்களுக்கு ஜோகியர்களே முன்னோடிகள்.

ஒரு மனிதனின் பிறப்பானது அவனது முற்பிறவி வினைக்கு ஏற்பவே அமைகிறது. அரசனுக்கு மகளாய்ப் பிறப்பது முதல் ஆண்டியாய் இருப்பது வரை அனைத்தும் கருமம் சார்ந்ததே.

பாம்பாட்டி சித்தரும் கர்மப்படி ஜோகியராய்ப் பிறந்து பாம்பு பிடித்து அதை ஆட்டி வைப்பது அதோடு விளையாடுவது இவற்றில் எல்லாம் அதிசிறந்தவராகத் திகழ்ந்தார்.

இவர் காலத்திலும் நாகரத்தினங்களுக்காக பாம்புகளைத் தேடுவோர் இருந்தனர். பல ஆண்டு காலத்திற்கு ஒரு பாம்பானது ஒருவரையும் தீண்டாது வாழ்ந்திட, அந்த விஷமானது கெட்டிப்பட்டு கல் போலாகி அந்தப் பாம்பிற்கே அது வினையாகும். அந்தக் கல், அதற்கு வேதனை தரும் எனவே அது அந்த விஷக்கல்லை வெளியேற்ற மிகவும் சிரமப்படும். அப்படி சிரமப்படும் பாம்புகளைக் கவனித்து கண்டறிந்து கெட்டியான கல்போன்ற அந்த விஷத்தை எடுத்து அதை நாகமாணிக்கமாகக் கருதி அதிக விலைக்கு விற்பார்கள்.

சிலர் இந்த மாணிக்கத்தை ஒரு தாயத்துக்குள் அடைத்து இடுப்பில் கட்டிக் கொள்வர். இதனால் எதிர்மறை துன்பங்கள் நேராது என்பது நம்பிக்கை.

பாம்பாட்டி சித்தரும் பாம்பு பிடிப்பதில் சூரராக இருந்த போது அவருக்கும் நாகமாணிக்கத்தை தலைமேல் வைத்திருக்கும் பாம்பைத் தேடுவது ஒரு பெரும் லட்சியமாகவே இருந்தது.

ஆனால் அந்த மாதிரி பாம்புகள், அவ்வளவு சுலபத்தில் வசப்பட்டுவிடாது. ஒரு நாள், அப்படி ஒரு பாம்புக்காக புற்று புற்றாக கையை விட்டுக் கொண்டிருந்த ஜோகியராகிய பாம்பாட்டி, ஒரு புற்றில் கையை விட்ட போது விக்கித்துப் போனார்.

உள்ளே ஒரு சித்த புருஷர் தவமியற்றிக் கொண்டிருந்தார். அவர்மேல் பாம்பாட்டியின் கை பட்டு விட, அவரது தவம் கலைந்தது. முதலில் கோபம் வந்தாலும், ஜோகியர் பிழைப்பே பாம்பு பிடிப்பதுதான் என்பதால், அது உடனேயே தணிந்தது.

"நீ யாரப்பா....?" சித்த புருஷன் கேட்டார்.

**மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து**
**நட்பினுள் சாப்புல்லற் பாற்று** 829

பகைமை தோன்றாதபடி புறத்தில் அளவு கடந்து நட்பாடி, அகத்தில் தம்மை இழிவாகக் கருதும் பகைவரை தாமும் புறத்தே நட்பாடி அவர் மகிழும் படி செய்து அகத்தே அந் நட்பு சாகும் படி நடந்து கொள்ள வேண்டும்.

"ஜோகிங்க சாமி...."

"அரவம் பிடிப்பதுதான் உன் தொழிலா?"

"ஆமாங்க பாழாப்போன தொழிலுங்க .. நாகமாணிக்கப் பாம்பு ஒண்ணு சிக்குனா கூட போதும் இந்தப் பொழப்ப விட்றுவேன்.."

"ஓ மாணிக்கக் கல்லுக்காக பாம்புகளை வேட்டையாடுபவனா நீ?"

"இல்லீங்க கல்லு கிடைக்கட்டும், கிடைக் காமப் போகட்டுங்க, ஊரே பயப்பட்ற பாம்புகளை தைரியமாய்ப் பிடிச்சு, அதை மகுடி ஊதி ஆட வைக்கிறது எனக்கு ரொம்ப பிடிக் குங்க .... அதுல ஒரு பரவசம் இருக்குங்க!"

"அற்ப பாம்புகளைப் பிடித்து விளையாடுவதில் உனக்கு ஒரு பரவசமா?"

"அட என்னங்க நீங்க....புத்து கட்டினது கூட தெரியாம உக்காந்து ஏதோ மந்திரம் சொல்லிட்டு இருக்கற உங்களுக்கு மந்திரம் சொல்றதுல பரவசம்னா, எனக்குப் பாம்பை ஆட்டி வைக்கிறதுல பரவசங்க என் தைரியம் உங்களுக்கு உண்டா?"

"பகலில் வெளியே வர பயந்து கொண்டும், இரவில் இரை தேடியும் கரையான் புற்றுக்குள்ளும், தூவாரங்களிலும் புகுந்து கொண்டு சுருண்டு படுத்துக் கொள்ளும் பயத்தின் சொரூபமான பாம்புகளைப் பிடிப்பதும் ஆட்டி வைப்பதுமே உனக்கு ஒரு பெரிய பரவசத்தையும் ஆர்வத்தையும் தருமானால் எனக்குள் இருக்கும் குண்டலினி என்னும் பாம்பை, நினைத்த பொழுதெல்லாம் ஆட்டி வைத்து, மலப்பைக்கு நடுவில் கிடக்கும் அந்தக் குண்டலினியை முதுகுத் தண்டு வழியாக உச்சந்தலையாகிய சகஸ்ராரத்திற்குக் கொண்டு சென்று சதாசர்வ காலமும் நித்ய பரவசத்தில் திளைத்தபடி இருப்பவனான நான், எவ்வளவு கர்வம் கொள்ளலாம் தெரியுமா?"

அவர் கேள்வி, அந்த ஜோகிக்கு ஆச்சரியமும் அதிர்ச்சியும் அளித்தது.

"உங்களுக்குள் ஒரு பாம்பா?" - இது முதல் கேள்வி, குண்டலினியை எழுப்பி சகஸ்ராரம் வரை கொண்டு செல்வதில் அவ்வளவு பரவசம் உள்ளதா?- இது அடுத்த கேள்வி...

அவரும், "அனுபவித்தால் தானே தெரியும்? சர்க்கரை என்று சொன்னால் இனித்து விடுமா?" என்று திருப்பிக் கேட்க..... ஜோகிக்கும் அவருக்கும் இடையே நெருப்பு பற்றிக் கொண்டது.

"நீங்க சொல்றது ஏத்துக்க முடியாததுங்க சாமி... பாம்பு பிடிக்கிறது எவ்வளவு கஷ்டம் தெரியுமா? உயிர் போகிற வாழ்க்கைங்க...."

"அப்படியா... யோகிக்கு அதெல்லாம் ஒரு விஷயமில்லைப்பா..... உடம்பை ஆட்டிப் படைக்கத் தெரிந்த யோகிகளை, எந்தப் பாம்பும் எதுவும் செய்யாது பார்க்கிறாயா?"

அவர் கேள்வியோடு பக்கத்து புற்றில் கையைவிட்டு நாகனையும், சாரையையும் கட்டு விரியனையும் வாலைப்பிடித்தெல்லாம் இழுத்து மேனி மேல் விட்டுக் கொண்டார். அவைகளும் அவரிடம் குழந்தை போல விளையாடின.

ஜோகிக்கு வியப்பு தாளவில்லை.

அந்த நொடி, ஜோகிக்கு தன் தைரியம் பரவசம் எல்லாம் ஓர் அற்பமான எண்ணமே என்பது விளங்கி விட்டது.

பகைநட்புஆம் காலம் வருங்கால் முகம்நட்டு
அகநட்பு ஒரீஇ விடல் 830

தம் பகைவர் தமக்கு நண்பராகும் காலம் வந்தால் முகத்தளவில் நட்புச் செய்து, அகத்தில் நட்பு நீக்கி, பின்பு வேண்டாத போது புறநட்பையும் விட்டுவிட வேண்டும்.

"சாமி நான் உங்கள மாதிரி சாமி யாருங்க, என்னவோ ஏதோன்னு நினைச்சேன். ஆனா உண்மையில் என்னை நானே இவ்வளவு நாளா ஏமாத்திகிட்டு வந்திருக்கேன். சாமி... நான் இனி வெளிய இருக்கிற பாம்பைப் பிடிச்சு அதை இம்சை பண்ணமாட்டேன். எனக்குள்ள ஒரு பாம்பு இருக்குன்னு சொன்னீங்களே... அதைப் பிடிக்க எனக்கு சொல்லித் தாறீங்களா?"

அது அவ்வளவு சுலபமல்ல..மன உறுதி, வைராக்யம் இரண்டும்"

"என்கிட்ட அது நிறையவே இருக்குங்க... சொல்லுங்க, நான் என்ன செய்யணும்?" ஜோகி கேட்க, சிஷ்யனாக ஏற்பது போன்ற கனிவான பாவனையில் அவரும் பார்க்க, அந்த நொடியே அவருக்கு அந்த ஜோகி சிஷ்யனானான்.

சில வருஷத்திலேயே குருவை விஞ்சும் சிஷ்யனாகி விட்டான்.

குருவின்மேல் ஒரு கம்பளிச் சட்டை கிடந்தது. அழுக்கேறிய சட்டை ஆனால், அது அவர் உடல் சூட்டை ஒன்றே போல் வைக்க உதவிக் கொண்டிருந்தது. எப்பொழுதும் கம்பளிச் சட்டையுடன் காணப்பட்டதால், சட்டை முனி என்று அழைக்கப்பட்டார் அவர். சிஷ்யன் ஜோகியோ குண்டலினிப் பாம்பை ஆட்டி வைக்க வெகுவேகமாகக் கற்றதால், பாம்பாட்டி சித்தர் ஆனார்.

ஒரு சித்து உள்ளே வருவது தானே கடினம்! அப்படி வந்து விட்டால், அது வந்த அதே வழியில்தான் வரிசையாக எல்லா சித்துக்களும் வந்து விடுமே?

பாம்பாட்டி சித்தரும் ஜெகஜ்ஜால சித்த ரானார். எச்சில் உமிழ்ந்து, அந்த உமிழ் நீரில் தங்கம் செய்வதிலிருந்து குப்பென்று ஊதி, ஊதிய வேகத்தில் காற்று விசையால் ஒருவரைக் கீழே விழ வைப்பது வரை அவரது சாகசங்களுக்கு ஓர் அளவே இல்லாமல் போயிற்று.

ஆனாலும், அவர் அவைகளைப் பெரிதாகக் கருதாமல், குண்டலினி யோகத்தைத்தான் பெரிதாகக் கருதினார்.

உலகத்துப் பாம்புகள், ஒன்றுமில்லாதவை, உள்ளிருக்கும் பாம்போ சுகத்தின் மூலம் என்று, தானறிந்த உண்மையை உரக்கச் சொல்லத் தொடங்கினார்.

"இருவர் மண் சேர்த்திட, ஒருவர் பண்ண

ஈரைந்து மாதமாய் வைத்த சூளை

அருமையாய் இருப்பினும் அந்த சூளை

அரைக் காசுக்கு ஆகாதென்று ஆடு பாம்பே!"

என்று உடல் பற்றி சொன்னாலும் சரி, உள்ளம் பற்றி சொன்னாலும் சரி, அதை குண்டலினியில் முடித்தார். அதை எழுப்பி ஆட்டி வைப்பதில்தான் எல்லாம் இருக்கிறது. என்பதற்கு உதாரணமாக இருந்து, உலகுக்கும் நிரூபித்தார்.

ஒருமுறை அரசன் ஒருவனை பாம்பு தீண்டிவிட, அவன் மரணித்து விட்டான். அவனைக் கடித்த பாம்பையும் அடித்துக் கொன்று விட்டனர். அதைக் கண்ட பாம்பாட்டி சித்தர், ஓர் உபாயம் செய்தார். இறந்த பாம்பை எடுத்து, உயிருடன் இருப்பவர்கள் மேல், வீசி வேகமாக எறிய, அவர்கள் பயந்து ஓடினர்.

தங்களுக்கு உயிர் மேல் இருக்கும் பற்றினை அந்த நொடி வெளிக் காண்பித்தனர். அந்த நொடியில், உருமாறல் மூலம் அரசன் உடம்புக் குள் புகுந்த பாம்பாட்டி சித்தர் உயிர்த்து எழுந்து அமர்ந்தார். செத்த பாம்புக்கும் உயிர் தந்து, 'உம் ஆடு' என்றார். அதுவோ உயிர் பிழைத்த ஆச்சரியத்தில் ஓடத் தொடங்கிற்று.

அரசர் எப்படிப் பிழைத்தார்? அவரால் செத்த பாம்பை எப்படிப் பிழைக்க வைக்க முடிந்தது? போன உயிர் எப்படித் திரும்பி வரும்? என்றெல்லாம் எல்லோரும் கேள்விகளில் மூழ்கிக்

கிடக்க அரசி மட்டும் சூட்சுமமாக அரசரை வணங்கி, "என் கவரை உயிர்ப்பித்து நிற்கும் யோகி யார்?" என்று கச்சிதமாய்க் கேட்டாள்.

பாம்பாட்டியாரும் அவளது தெளிவைக் கண்டு வியந்து தான் யார் என்று உரைத்ததோடு "அரவம் தீண்டி இறந்து போகுமளவு ஒரு கர்ம வாழ்வு இருக்கலாமா? இது எவ்வளவு நிலையற்றது.... எவ்வளவு அச்ச முள்ளவர்களாக உயிராசை மிக்கவர்களாக இருந்தால், செத்த பாம்பு, மேலே விழுந்ததற்கே இந்த ஓட்டம் ஓடுவீர்கள்...!?" என்றெல்லாம் கேட்க அனைவரும் சிந்திக்கத் தொடங்கினர்.

அப்படியே அரசனின் உடலில் இருந்த வண்ணமே வாழ்வின் நிலையாமை, உடலின் தன்மை உறவின் தன்மை, உலக மாயை, நிலையானவை எவை, நிலையற்றவை எவை என்று பல்வேறு பாடல்களைப் பாடினார்.

எளிய தமிழில் கருத்தைச் சொல்லி.... அந்தக் கருத்தின் நிமித்தம் மகிழ்ந்து ஆடு பாம்பே என்று அவர் தன் எதிரில் இருக்கும் பாம்புக்குச் சொல்வது போலவே, அகத்துக்குள் இருக்கும் பாம்புக்கும் உபதேசம் செய்தார்.

பின்னர், மலைத் தலங்களில் திரிந்து தவம் செய்த இவர், அதிக காலம் வசித்தது கோவை அருகில் உள்ள மருத மலையில் என்பார்கள்.

கார்த்திகை மாத மிருகசீரிட நட்சத்திரத்தில் அவதரித்ததாக இவர் பற்றித் தெரிய வருகிறது.

இவர், 'சித்தாரூடம்' எனும் நூலையும் எழுதியவர்.

நன்றி: 'பக்தி'

# இலையமுதம்

## தூதுவளை *(Solanum Trilobatum)*

### மருத்துவச் சிறப்புக்கள்

இது மூலிகைகளில் மிகவும் தலை சிறந்த ஒன்றாகும். தடிமன், பீனிசம் போன்ற குறை பாடுகளை நீக்க வல்லது. ஆண்களின் வீரியத்தைக் கூட்ட வல்ல சிறந்த மூலிகை யாகும். யோகிகளின் நாளாந்த உணவில் இதன் இலைகளும், பூக்களும் காய்களும் முக்கிய இடத்தைப பெறுகின்றன. இதற்கு தங்கவல்லி, அமிர்த சஞ்சீவி போன்ற சிறப்புப் பெயர்களும் உண்டு.

### சமையல் முறைகள்

### பசுமை இலையமுத உணவு முறைகள்

**1. பச்சடி**

அளவாக முற்றிய மலர்களையும், இலைகளையும் பறித்து உப்பு நீரில் கழுவி பச்சை மிளகாய், சுட்டு எடுத்த வெள்ளைப் பூடுகள், உப்பு, நற்சீரகம், கறிவேப்பிலை யாவற்றையும் ஒன்று சேர்த்து அரைத்து சுவையூட்டும் அளவு எலுமிச்சப்பழச் சாற்றையும் சேர்த்துப் பச்சடியாக்கவும்.

**2. அரையல்**

மேற்கூறிய கூட்டுடன் தேங்காய்த் துருவலும் சேர்த்து அரைத்தால் அதை அரையலாக்கலாம்.

**3. தூதுவளம் காய்ப் பொரியல்**

காய்களைச் சேகரித்து சுத்தமாக்கி அளவான உப்பு நீரில் வேக வைத்த பின் நல்லெண்ணெய், சூரியகாந்தி போன்ற எண்ணெய்களில் ஒன்றில் பொரித்து உண்ணும் பொழுது தாதுவிருத்தியின்மை, மார்புச் சளி முதலியவற்றால் வருந்துவோருக்கு சிறந்த ஒளடதமாகும். நீரிழிவு நோயால் அவதியுறு வோருக்கும், இது சிறந்த ஒளடதமாகின்றது.

### தடிமன் வைத்தியம்

பழங்கால முறைப்படி சாதாரணமாக தடிமன் அவியல் என்று கொடுப்பார்கள். தூதுவளை இலை, அதிமதுரம், துளசி, கற்பூரவல்லி இலைகள், கொத்துமல்லி முதலியவற்றை எல்லாம் வேக வைத்தக் கஷாயமாக்கி தினம் மூன்று வேளை தொடர்ந்து அருந்தி வந்தால் தடிமன் பிரச்சனையில் இருந்து காப்பாற்ற வல்லதும் உடலிற்கு நலன் தருவதுமான பண்டைய முறைக் கஷாய மாகும்.

# திருவருட்பயன்

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்

## பத்தாம் அதிகாரம் -

## அணைந்தோர்தன்மை

### அணைந்தோராவர் சீவன் முத்தர் சீவன் முத்தர் நிலை

**ஓங்குணர்வி னுள்ளடங்கி யுள்ளத்து ளின்பொடுங்கத்**
**தூங்குவர்மற் றேதுண்டு சொல்.**

பதவுரை: ஓங்கு உணர்வினுள் அடங்கி - (சீவன் முத்தர் நிறைந்த ஞானத்தினுள்ளே அடங்கி, உள்ளத்துள் இன்பு ஒடுங்க தம் மறிவினுள்ளே பேரின்பம் நிறைதலால், தூங்குவர் ஆனந்த நித்திரை செய்வர், மற்று ஏது உண்டு சொல் - அவருக்கு வேறு என்ன காரியம் உண்டு? சொல்வாயாக; (ஒன்று மில்லை என்றபடி).

### இவர் பதியைப்போல் ஐந்தொழிலும் பசுக்களைப்போல் வினைகளேனுஞ் செய்யார்.

**ஐந்தொழிலுங் காரணர்க ளாந்தொழிலும் போகநுகர்**
**வெந்தொழிலு மேவார் மிக.**

பதவுரை: ஐந்தொழிலும் - சிவத்தினாற் செய்யப்படும் ஐந்தொழில்களையேனும், காரணர்களாந் தொழிலும் திருவருளாற் பிரேரிக்கப்பட்டு நடைபெறுந் தனித்தொழில்களை யேனும், போக நுகர் வெந்தொழிலும் - மாயா போகத்தை அனுபவிக்கும் வெய்யவிடைகளை யேனும், மிக மேவார் சிறிதும் பொருந்தார்.

### முத்தர் எங்குஞ் சிவத்தையே காண்பவர்

**எல்லா மறிவு மறிவுறினு மீங்கிவரொன்**
**றல்லா தறியா ரற.**

பதவுரை: எல்லாம் அறியும் அறிவு உறினும் - எல்லாவற்றையும் அறியும் ஞானத்திற் கலந்து நிற்பினும், இங்கு இவ்விடத்து, இவர் - சீவன் முத்தர், ஒன்று அல்லாது - சிவமொன்றையே யன்றி மற்றொன்றையும், அற அறியார் - சிறிதுங் காணார்.

### அவர் விடயங்களைக் காணாமைக்குக் காரணம்

**புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவர் போதார்**
**தலநடக்கு மாமை தக.**

பதவுரை: தலம் நடக்கும் ஆமை தக - தன்வழிச் செல்லும் ஆமை (யானது ஆரவாரமுள்ள இடத்தில் தன்னுடைய ஐந்துறுப்புக்களையும் உள்ளுக்கு இழுத்து அசை வில்லாமற் கிடப்பது) போல புலன் அடக்கி - (முத்தர் தமது பொறிகளையும் மனத்தையும்) விடயங்களிற் செல்லாமல் உள்முகமாகும்படி அடக்கி, தம் முதற் கட்புக்குறுவர் - தமது முதலாகிய சிவத்திலே புகுந்து பொருந்தி நிற்பர். போதார் (வெளியே விடயங்களிற் பொறிகளைப்) போகவிடார்.

### அவர் சர்வ வியாபகர்

**அவனையகன் றெங்கின்றா மாங்கவனா மெங்கு**
**மிவனையொழிந் துண்டாத வில்.**

பதவுரை: அவனை அகன்று - சிவத்தை நீங்கி, எங்கு இன்றாம் - எவ்வுலகமுமில்லை, ஆங்கு - அதுபோல, அவனாம் இவனை ஒழிந்து - சிவமாதலை யடைந்த முத்தனை நீங்கி, எங்கும் உண்டாதல் இல் - எவ்விடமும் உளதாய் நிற்றல் இல்லை.

### அவருக்கு விருப்பு வெறுப்பில்லை

**உள்ளும் புறம்பு மொருதன்மைக் காட்சியருக்**
**கெள்ளுந் திறமேது மில்.**

பதவுரை: உள்ளும் புறம்பும் ஒரு தன்மைக்காட்சியருக்கு - உள்ளும் வெளியும் ஒரு தன்மைத்தாய்க்காணும் ஞானத்தை அடைந்த சீவன் முத்தருக்கு, எள்ளும் திறம் ஏதும் இல் - ஒன்றையும் இகழுந் தன்மையில்லை.

### அவரது வினையின் பயன் சிவாநந்தம்

**உறுந்தொழிற்குத் தக்க பயனுலகந் தத்தம்**
**வறுந்தொழிற்கு வாய்மை பயன்.**

பதவுரை: உறுந் தொழிற்குத் தக்க பயன் - பயன் எனது என்னுஞ் செருக்கோடு செய்யப்பட்ட வினைக்குத் தகுந்த பலன், உலகம் - உலக வாழ்க்கைகளாம். தத்தம் வறுந் தொழிற்கும் பயன் அந்தச் செருக்கு நீங்கிய தொழிலுக்குரிய பலன், வாய்மை - மெய்ப்பொருளாகிய முத்தியின்பம்.

### அவருக்குக் கன்மந் தீரும் முறைமை

**ஏன்ற வினையுடலோ டேகுமிடை யேறும்வினை**
**தோன்றி லருளே சுடும்.**

பதவுரை: ஏற்றவினை - பிரார்த்தமானது உடலோடு ஏகும் - தேகம் நீங்கும்போது நீங்கும், (இவ்வுடலால் நுகரப்பட்டுத் தொலையும் என்றபடி) இடையேறும் வினைதோன்றில் - முக்திக்கும் (ஆணவமல நீக்கத்துக்கும்) தேகத்தின் முடிவுக்குமிடையில் வினை செய்யப்படின், அருளே சுடும் - அவ் வினையைத் திருவருளே நீக்கும்.

### சீவன் முத்தர் நிலை பரமுத்தி

**மும்மை தரும்வினைகண் முளாவா மூதறிவார்க்**
**கம்மையு மிம்மையே யாம்.**

பதவுரை: மும்மை தரும் வினைகள் மூளாவாம் - இம்மை மறுமை அம்மை என்னும் மூவகைப் பயனையுந் தரும் வினைகளொன்றும் அவரைத் தாக்க மாட்டா, மூதறிவார்க்கு - (ஆதலால் ஆணவமலம் நீங்கிப்) பேரறிவைப் பெற்ற முத்தருக்கு, அம்மையும்மிம்மையே ஆம் - பரமுத்தியும் சரீரம் இருக்கையிலே யுண்டாம்.

### அவர் பெத்தான்மாக்களில் அருளுடையவர்

**கள்ளத் தலைவர் துயர் கருதித் தங்கருணை**
**வெள்ளத் தலைவர் மிக.**

பதவுரை: கள்ளத் தலைவர் துயர் கருதி - ஆணவத்தால் வரும் பொய்யறிவு நிறைந்த பெத்தான்மாக்கள் படுந் துன்பத்தை எண்ணி, தம் கருணை வெள்ளத்து (சீவன் முத்தர்) தம்மிடத்திலுள்ள இரக்கமாகிய கடலில், மிக அலைவர் - மிகவும் அலைதலைச் செய்வர்.

உமாபதி சிவாச்சாரியார் திருவடி வாழ்க!
மெய்கண்டதேவர் திருவடி வாழ்க!

## புண்ணியகாலம்

- ஆனி, புரட்டாதி, மார்கழி, பங்குனி என்னும் நான்கு மாசப் பிறப்பும் சடசீதியாகும். இவைகளில் மாசம் பிறந்தபின் பதினாறு நாளிகை புண்ணியகாலம்.
- வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி, என்னும் நான்கு மாசப்பிறப்பும் விட்டுணுபதியெனப்படும். இவைகளில் மாசம் பிறக்குமுன் பதினாறு நாளிகை புண்ணியகாலம்.
- தக்ஷிணாயனமாகிய ஆடிமாசம் பிறக்குமுன் பதினாறு நாளிகை புண்ணியகாலம். உத்தராயணமாகிய தை மாதம் பிறந்த பின் பதினாறு நாளிகை புண்ணியகாலம்.
- சித்திரை, ஐப்பசி, விஷுவெனப்படும் இவைகளில் மாதம் பிறக்கு முன்னெட்டு நாளிகை பின்னெட்டு நாளிகை புண்ணியகாலம்.
- சூரிய கிரகணத்திலே பரிச காலம் புண்ணியகாலம். சந்திர கிரகணத்திலே விமோசன காலம் புண்ணியக்காலம்.
- வியதிபாதம், சிவராத்திரி, அர்த்தோதயம், மகோதயம் முதலிய பிறவும் புண்ணியகாலங்களாம்.
- ஈர ஆடை தரித்துக் கொண்டு சந்தியாவந்தனம் சிவபூசை முதலிய கருமங்கள் செய்யினுங் குற்றமாம். இக்குற்றம் நீங்க மீளவும் நீராடினால் நீங்கும்.

# கிராமியக் கலைகளில் கரகாட்டக்கலை

A.S. இராதாக்கிருஷ்ணன் B.A, DIP IN EDU.
ஆசிரிய ஆலோசகர்

கிராமியக் கலைகளாக கரகம், கும்மி, கோலாட்டம், கூத்து, குறவன், குறத்தி ஆட்டம், மாரட்டி ஆட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், காவடி என்பவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம். கிராமியக் கலைகளில் ஒன்றாக விளங்கும் கரகக் கலையானது கிராம மக்களின் வாழ்வியலில் ஒன்றிணைந்து சமய, சமூக வழிபாட்டுமுறைகளில் முக்கிய இடத்தினை இன்று வரை பெற்று நிலைத்து வருகின்றது. கரகம் என்ற சொல் கமண்டலம், ஆலங்கட்டி, நீர்த்துளி, கங்கை, பூங்குடம் ஆகிய பொருட்களைத் தருகின்றது. கரகத்துக்கு கரகச் செம்பு ஆட்டம், கரகக் குடம், கும்ப ஆட்டம் என மறு பெயர்களும் உண்டு. கரகம் என்பது ஒருவகை குடத்தினைக் குறிப்பதாகும்.

கரகாட்டம் இறைவழிபாட்டு அம்சங்களுடன் இணைந்த சமய நிகழ்வாகவும், தொழில் முறையிலமைந்த நிகழ்வாகவும் சமுதாயத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதினை இனம் கண்டு கொள்ளலாம். கரகத்தின் அமைப்பானது செம்பு, வெள்ளி, மண் இவற்றில் ஏதாவது ஒன்றினால் ஆக்கப்பட்ட பாத்திரத்தினை மலர்களால் அலங்கரித்து கூம்பு வடிவமான வாயில் வடிவில் பொருத்தி அதன் உச்சியில் கிளி அல்லது பொம்மையை வைப்பர். பாத்திரத்தினுள் நீர், அரிசி, மண் முதலியவற்றை இட்டிருப்பர். இன்று இவ்வடிவ நிலையில் மாற்றங்கள் இடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். கரகத்தில் இருவகைகள் உண்டு. சந்திரக் கரகம், ஆடு கரகம், என்னும் இருவகை கரகங்கள் அவையாகும். சந்திரக் கரகத்தினை ஆண்களும், ஆடு கரகத்தினை பெண்களும் ஆடுவது வழக்கமாகும். சந்திரக் கரகம் சடங்கு முறை சார்ந்ததாகும். ஆடு கரகம் தொழில் முறை சார்ந்ததாகும்.

சடங்கு முறை சார்ந்த கரகாட்டம் கிராமியத் தெய்வ வழிபாட்டு முறைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. கரகாட்டம் மாரியம்மன் இறைவழிபாட்டோடு இணைந்த கலை அம்சமாகக் கிராமப்புறங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கிராமிய மக்கள் மத்தியில் வரட்சி, வறுமை போன்றவை ஏற்படுகின்ற வேளையில் மாரியம்மனைக் குளிர்ச்சி செய்வதற்காக இயற்றப்படும் வழிபாட்டு முறைகளில் கரகாட்ட வழிபாடும் ஒன்றாகும். இக் கரகாட்டத்துக்குப் பயன்படுத்தப்படும் குடம் நீரினால் நிரப்பப் பெற்றிருக்கும். இந்த நீர் மாரியம்மனையும், ஏழு புண்ணிய நதிகளையும் குறிப்பிடுவனவாக மக்கள் நம்புகின்றனர். இறைவழிபாட்டுடன் ஆடப்படும் கரக ஆட்டக் குடங்கள் பூக்களாலும், வேப்பிலையாலும் அழகு செய்யப்பட்டிருக்கும். நாட்டிலும், கிராமத்திலும் வளம் கொளிக்க வேண்டும் என்றும், மழை வளம் கிடைக்க வேண்டும் என்றும் கருதி அம்மன் பக்தர்கள் குடமெடுத்து ஆடுவார்கள். ஒரு வகைப் பிரம்பு கொண்டு அதனைத் தட்டியவாறு ஆடுவர். ஊர்

சுற்றி வந்து ஆடுவர். மக்கள் பற்றுடன் அவர்களை வரவேற்று மஞ்சள் அரைத்துப் பூசி அவர்களுடைய காலில் நிறை குடத்து நீர் ஊற்றி வணங்கி நிற்பர். ஊர் செழிக்க மழை வேண்டி மாரியைக் குறித்து இவ்வாட்டம் இடம் பெறும்.

தொழில் முறை சார்ந்த கரகாட்டத்தில் பெண்களும், சிறுவர்களும் ஈடுபடுவர். இன்று இவ் வாட்டத்தினை ஆண்களும் பெண்களும் இணைந்து மேற் கொண்டு வருவதினையும் கண்டு கொள்ளலாம். சமய வழிபாட்டுக் கரகாட்டத்துக்கும், தொழில் முறை சார்ந்த கரகக்குடம் அரிசியாலும், மண்ணினாலும் நிரப்பப்பட்டு காகிதத்தால் ஒப்பனை செய்யப் பட்டு (வண்ணக் காகிதத்தாள்கள்) கரகத்தின் உச்சியில் ஒரு பொம்மைக்கிளி பொருத்தப் பட்டிருக்கும் பெண்களே மிகப் பெரும்பாலும் இவ்வாட்டத்தில் ஈடுபடுவர். ஆண்களும் சில இடங்களில் இவ்வாட்டத்தினை ஆடுவதைக் காணலாம். தொழில்முறை சார்ந்த கரகாட்டத் தினை மேற் கொள்ளும் கலைஞர்கள் வெண்கலக் குடத்தையே வைத்தாடுவர்.

கரகம் ஆடுவோரின் தோற்றத்தை நோக்கில் கையில் வேப்பிலையும், இடுப்பில் மஞ்சள் செருகல்களுடன் ஆண்கள் காவியு டையும், பெண்கள் பல வகையான வண்ணத் தோற்றத்துடனும் காட்சியளிப்பர். காலில் சதங்கைகள் அணிந்திருப்பர். கரகாட்டக் காரர்கள் ஆடையை இறுக்கமாக அணிந்து கொள்வர். கரகாட்டமுறையை நோக்குகின்ற பொழுது தலையில் வைத்து ஆடும் கரகம் சுழன்றும், குந்தியும், குனிந்தும், நிமிர்ந்தும் ஆடப்படும் இசைக் கருவிகளின் துணையுடன் ஆடல் இணைந்து ஆடப்படும். ஆரம்ப காலத்தில் உடுக்கை என்ற கருவியின் துணையோடு மாரியம்மன் தாலாட்டுப் பாடல்கள் இசைத்து கரகம் ஆடுமுறை காணப்பட்டது. கரகமெடுத்து ஆடுவோர் சில வகையான பாடல்களைப் பாடுவர். இப்பாடல்கள் நாட்டுப்புறப் பாடலிசை அமைப்பில் காணப் படும். ஒன்று முதல் பத்து வரை எண்களைக் கொண்டமைந்த பாடல் களாக அமைவு பெற்றுள்ளன. உதாரணமாக முத்து மாரியம்மனை அழைத்துப் பாடல் ஒன்றினை நோக்கின் இவ்வுண்மை புலனாகும்.

**'ஒன்னாக் கரகமடி எங்கள் முத்துமாரி**
**ஒசந்த கரகமடி எங்கள் முத்துமாரி**
**இரண்டாம் கரகமடி எங்கள் முத்துமாரி**
**ரத்தினக் கரகமடி எங்கள் முத்துமாரி'**

என அமைவு பெறும். இன்று இக் கரகாட்டத்தில் தவில், நாதஸ்வரம், தாளம், குமுகு, பம்பை போன்ற இசைக் கருவிகளும் இணைந்து ஆட்டம் ஆடப்படுவதைக் கண்டு கொள்ளலாம். கரகாட்டத்தின் பொழுது தொட்டும், தொடாமலும் ஆடுவர். ஆட்டம் தொடக்க நிலை, வேக நிலை, அதி வேக நிலை என்னும் முறையில் ஆடப்படும். இசைக் கருவிகள் இசைப்பதற்கு ஏற்ப பல்வேறு அங்க பாவங்களைக் காட்டி ஆடுவர். தொடக்க நிலையில் ஆட்டம் மெதுவாகவும், போகப் போக ஆட்டத்தின் நிலையில் வேகம் அதிகரித்துச் சென்றும் ஈற்றில் அதிவேக நிலையில் உச்ச கட்டத்தினை எட்டி முடிவடையும். ஆட்டத்தின் பொழுது இசையின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க ஆடப்படும் வேகமும் அதிகரித்துச் செல்லும். ஆட்டத்தில் உணர்ச்சி பெருக்கம் அதிகரிக்கும் வேளையில் வாத்தியக்காரர்கள் ஆட்டக்காரர்களைச் சுற்றிச் சுற்றி வருவார்கள்.

ஆடுபவர்கள் விழுந்தும், எழுந்தும், சரிந்தும் ஆடுகின்ற வேளையில் கரகம் நிலை குலை யாது தலையில் இருப்பது பெரும் வியப்பினை யூட்டுகின்றது. இது தெய்வ சித்தத்தின் நிலையை வெளிப்படுத்துகின்றது. இசையும், ஆட்டமும் உச்சம் பெறுகின்ற வேளையில் கரகம் நிலை குலையாது தலையில் இருப்பது பெரும் வியப்பினை யூட்டுகின்றது. இது தெய்வ சித்தத்தின் நிலையை வெளிப்படுத்துகின்றது. இசையும், ஆட்டமும் உச்சம் பெறுகின்ற வேளைகளில் திடீர் என இசைக் கருவிகளின் இசைப்பு நிறுத்தப்படும். ஆட்டமும் முடிவுக்கு கொண்டு வரப்படுகின்றது. ஆரம்ப காலத்தில் நிலவிய கரகாட்டத்தில் ஒரு கரகத்தின்மேல் பல சிறிய கரகங்களை வைத்து ஆடப்படும் முறை காணப்பட்டது. இது ஆட்டக்காரர்களின் திறமையை வெளிப்படுத்துகின்ற ஓர் நிகழ்வாகக் காணப்படுவதுடன் பக்திபூர்வமாக ஆட்டக் காரர்கள் இக் கலை நிகழ்வுடன் ஒன்றிணைத்து ஈடுபடும் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது.

இன்றைய நிலையில் இக்கலையானது புதுப்புது வகையான உத்திகளைக் கையாண்டு மேற் கொள்ளப்பட்டு வருவதினையும் கண்டு கொள்ளலாம். ஆட்டத்தின் நடுவில் பல விதமான தந்திர வித்தைகளை கரகாட்டக் கலைஞர்கள் காட்டுவர். தரையில் வீசப்படும் பணத்தை (பார்வையாளர்களால் வீசப்படும் பணம்) கைகொண்டு எடுக்கும் பொழுது தலையில் இருக்கும் கரகம் இருப்பு நழுவாது தாங்கப்படும் தன்மை வியப்பினை அளிப்பதுடன் ஆட்டக் காரர்களின் வித்தைச் சிறப்பினை எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன.

கரகாட்டத்தின் பொழுது குடத்துக்கு மேல் குடமாக பலகுடங்களை அடுக்கி ஆடுவதும் உண்டு. தலையில் ஒரு உலக்கையை நிலையாக நிறுத்தி அதன் உச்சியில் தீச் சட்டியை வைத்தும் ஆடுவர். தலை முடியில் தீப்பந்தங்களைக் கட்டி சுழன்று ஆடும் காட்சியும் கரகாட்டத்தின் பொழுது இடம் பெறுவதுண்டு. இது கண்ணுக்கு இனிய விருந்தாக அமைவதுடன் அச்ச மூட்டுவ தாகவும் அமையும். இவ் வாட்டத்தின் பொழுது அதிவேகமாக ஆடுவதே அதன் வெற்றியாக அமையும். கரகாட்டத்தில் கரகம் தலையி லிருக்கும்போது இரண்டு ஏணிகளைத் தரையில் நிறுத்தி அவற்றில் கால் கைகளை ஊன்றிச் சமப்படுத்தியவாறு மேலேறிக் கீழிறங்குவதும் ஆக ஆட்டம் மேற் கொள்ளப் படுவதுமுண்டு.

கரகமின்றி நிறுத்தப் பட்டுள்ள ஏணியிலே ஊடே நுளைந்து மேலும் கீழுமாக வந்தாடுவது முண்டு தரையிலே ஒரு குடத்தினைக் கவிழ்த்து வைத்து அதன் மேலேறிக் கரகமாடுவதுமுண்டு. இத்தகைய பல் வகையான வித்தைகளைக் காட்டி கரகாட்டக் கலைஞர்கள் தம்மாட்டத்தினை மேற்கொள்வர். மேற் குறித்த ஆட்டங்கள் கரகாட்டக் கலைஞர்களின் தொழில் சிறப்பு தன்மையை வெளிப்படுத்துவதுடன் மக்களையும் மகிழ்விப்பனவாக அமைந்துள்ளன. மேலும் சிறார்களை மகிழ்வு கொள்ள வைக்கும் தன்மையில் தொழில்முறை சார்ந்த கரகாட்டத் தில் குதிரை, யானை, சிங்கம், கரடி, எருது, மனிதத் தலை போன்ற முக அமைப் புக்கள் கொண்ட முகமூடிகளை அணிந்தும் கரகாட்டக் காரர்கள் கரகாட்டத்தினை மேற்கொள்வது முண்டு. நையாண்டி மேளத்தின் இசைக்கு பொருத்தமாக கரகாட்டக் கலைஞர்கள் இம் முக மூடிகளை அணிந்து பொருத்தப்பாட்டுடன் ஆடும் நிலையானது சிறுவர்களையும், பார்வை

யாளர்களையும் மகிழ்வூட்டுவனவாக அமைந்துள்ளமை சிறப்பான விடயமாகும். ஆரம்ப காலத்தில் ஆகம நெறி சாராத வழிபாட்டுக் கலையாகக் காணப்பட்ட கரகக் கலையானது தற்பொழுது ஆகம நெறி சார்ந்த வழிபாட்டுக் கலைகளுடனும் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். கரகக் கலையாட்டமானது சிறு தெய்வ வழிபாட்டிலும் சமூகச் சடங்குகளிலும், பெரு தெய்வ வழிபாட்டிலும் முக்கிய கலையம்சமாக மேற் கொள்ளப் பட்டு வருவதை இன்று கண்டு கொள்ளலாம்.

கரகாட்டக்கலை பற்றிய வரலாற்றுக் கூறுகளை சிலப்பதிகாரத்தில் கண்டு கொள்ளலாம். மாதவி பதினொரு வகையான ஆடல்களை ஆட வல்லவள். அவ் வாடல்களில் ஒன்று குடக்கூத்து என்று கூறப்படுகின்றது. கரகாட்டத்தினை தெய்வ நிலைப்படுத்திக் கூறுவதும் நோக்கத்தக்கது. பாணாசுரன் கண்ணபிரானின் பேரனான அனிருத்தனைச் சிறை வைத்தான். அவனை விடுவிப்பதற்காக மண்ணினாலும் வெண்கலத்தாலும் செய்த குடங்களைத் தலையில் வைத்து ஒருங்குசேர கண்ணபிரான் நகர விதியில் ஆடித் தனது பேரனைச் சிறை மீட்டதாக புராணக் கதைகள் கூறுகின்றன. கரகாட்டக் கலையானது தெய்வீகத் தன்மை வாய்ந்த கலை என்பது இதன் மூலம் புலனாகின்றது.

இன்று தெய்வ வழிபாட்டுக் கலையாகவும், தொழில்முறை சார்ந்த கலை வெளிப்பாடாகவும் மேற் கொள்ளப்பட்டு வரும் கரகக் கலையின் தொடக்க நிலையை நோக்கின் முற்காலத்தில் குடி தண்ணீர் எடுக்க வேண்டுமாயின் தூர இடங்களுக்குச் சென்று பெண்கள் ஆற்றிலோ, குளத்திலோ நீர் மென்று வருவது வழக்கமாக இருந்தது. நீர் நிறைந்த குடங்களைத் தலையில் வைத்து தூர இடங்களிலிருந்து கால் நடையாக நடந்து ஊர் மனை வந்தடைவர். இவ்விதம் நடந்து வரும் வேளைகளில் பழக்கத்தின் காரணமாகக் கையைக் கொண்டு குடத்தைப் பிடிக்காமல் நடந்திருப்பர். அந்த நடையில் ஓர் அழகுத் தன்மை மிளிந்து காணப்பட்டிருக்கும். அந நடையை கலையாகக் கண்டு களித்த மனிதர்கள் அதனை விரிவாக்கம் செய்தும், விளக்கம் பெறச் செய்தும் கரகாட்டக் கலையாக சீர்படுத்தி வளம் பெறச் செய்திருக்கலாம். மனிதனின் இயல்பான தேவை அதனைச் செயற்பட வைத்து அதன் மூலம் வளர்ந்த கலைத்தன்மை சீர்ப்பட்டு கலையாகத் தோற்றம் கண்டது எனலாம். நீருடன் மாரியை அடையாளம் கண்ட மனிதன் அதனை இறையருளுடன் கலந்து அந்தக் கலைக்கு வழிபாட்டுத் தன்மை கொடுத்து அதனைச் சமய உணர்வுக்குள் படுத்தித் தெய்வாம்சம் பொருந்திய கலையாகப் பரிமாணம் காண வித்திட்டிருக்க லாம். எனவே சமய உணர்வுடன் வளர்ச்சி பெற்ற கரகாட்டக் கலையானது பிற்காலத்தில் தொழில் முறை சார்ந்த கலையாட்டமாக விரிவு கண்டது எனக் கூறலாம்.

கிராமியக் கலையம்சமாக மிளிர்ந்து வரும் கரகாட்டக் கலையைச் சமய உணர்வுடன் நோக்குவதுடன் தொழில்முறை சார்ந்த கலையாகவும் இனம் கண்டு அக் கலை அழிவு கண்டிடாது நிலைத்து வளம் பெற வகை செய்வது சைவர்களாகிய எம் அனைவரினதும் கடமையாகும் என்பது குறிப்பிடத் தக்க விடயமாகும்.

# புராணபடனம்

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

நம் யாழ்ப்பாணத்துச் சைவசமய ஆலயங்களில் புராணபடனம் என்ற முறையில் தமிழ் மொழியில் சிறந்த வழிபாடு நிகழ்ந்து வந்தது. யாழ்ப்பாணத் தமிழரசர் காலத்தில் இப் புராண படன முறை ஆரம்பித்திருக்கலாம் என்றும் நாவலர் காலத்தில் இது உச்சம் அடைந்திருந்தது என்றும் கூறுவர். நாவலர் பெருமான் கந்தபுராண படனச் சிறப்பு பற்றிக் கூறும்போது இராசவசியம் நோய் நீக்கம், புத்திரப்பேறு முதலிய பயன்களைத் தவறாது தரவல்லது இது பலராலும் அநுபவம் மூலம் அறியப்பட்டது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். இதன் காரணமாக சிதம்பரத் தல வழிபாட்டில் பங்கு பற்றலும் சிதம்பர யாத்திரையிலும் ஆர்வமும் இருந்தது. இவற்றுடன் தமிழ் மொழியில் இயல்பான தேர்ச்சி மொழி சமயம் ஆன்மீகம் பற்றிய விளக்கம் என்பன நம் நாட்டில் சிறப்புற்றிருந்தன.

தன் பிள்ளை சாக மருந்து கொடுக்கும் பெற்றோர் போல் புராணபடனம் அருகி ஒழிய நம் நாட்டவரே காரணமாயிருந்திருக்கின்றனர் என்பதன்றி இதற்கு வேறுயாரையும் குறை கூறுதல் பொருந்தாது. விஞ்ஞான முன்னேற்றம், சினிமா, தொலைக்காட்சி என்பவற்றின் வசதி என்பவற்றைக் கூறுவது புத்திசாலித்தனமாகாது.

முதன் முதலில் நம் நாட்டில் 1958 இனக் கலவரம் நிகழ்ந்து தமிழ் மக்கள் துன்புற்றபோது யாழ்ப்பாணத்தில் சிவஞானியாக விளங்கிய யோக சுவாமிகள் கந்தபுராணத்தால் தான் நன்மையடைய முடியும் என்று பலரைப் பகிரங்கமாக வழிநடத்தியுள்ளார். நாம் யோக சுவாமிகளையும் தமிழ் மொழியையும் பாராட்டிக் கொண்டே புராண படன வழிபாட்டைப் புறக்கணித்துள்ளோம். இதனால் தமிழறிவையும் இறையருளையும் இழந்தோம் என்று தான் சொல்ல வேண்டும்.

இன்று பலர் புராணபடனத்தை ஊக்குவிக்க ஆர்வமாக உள்ளபோதும் புராணம் வாசிப்போர், பயன் சொல்வோர் கிடைக்காமல் கவல்கின்றனர். புராணம் வாசிப்பவர் பயன் சொல்பவர்களை நாம் தான் நம்முள்ளே தான் உருவாக்க வேண்டுமேயன்றி யூஎன்எச்சீ ஆரோ*(UNHCR)* ஜீரீசற்றோ *(GTZ)* தரமாட்டா.

புராணபடனம் தொடர்பாக சிந்திக்கும் இடங்களில் முறையாகத் தமிழ் படித்த பண்டிதர்மார் குறைந்து விட்டார்கள். இனியென்ன செய்வது, பண்டிதர்மாரை உருவாக்குவது எப்படி என்று திகைக்கின்றனர். பண்டிதர்மாரை உருவாக்குவது படிப்படியாக நிகழலாம். தாமதிக்கலாம். ஆனால் பத்து வருடங்களுக்கு மேல் தொடர்ந்து தமிழை ஒரு பாடமாகக் கற்றுத் தேறிய அனைவரும் புராணம் வாசிக்க ஆர்வம் கொண்டால் வாசிக்க இயலாதா? செந்தமிழும் நாப்பழக்கம் அல்லவா? முதல் நாள் வாசிக்கும் போது தடக்குப்படுபவர் நாலாம் நாள் வாசிக்கும்போது திருந்திவிடுவர்.

பல்கலைக்கழகத்தில் தமிழை ஒரு பாடமாகப் படித்த ஒருவர் ஊக்கத்துடன் முயன்றால் புராணத்துக்குப் பயன் சொல்வது பெரிய காரியம் அல்ல. "சபை நடுவே நீட்டோலை வாசியா நின்றான்...... நெடுமரம்" என ஒரு தமிழ்ப்பாடல் உண்டு. ஒரு பாட்டைப் படித்துப் பொருள் விளங்குவதும் தான் விளங்கியதை ஒரு ஒழுங்கு முறையில் குறிப்பிட்ட முறையில் எடுத்துச் சொல்வதும் பல்கலைக்கழகப் பட்டதாரியால் இயலாதா? இயலும். தேவை ஆர்வமும் ஊக்கமுமே.

புராண படனத்துக்குப் பலர் முன் வராததற்கு ஒரு காரணம் உள்ளது. இக்காரணம் பலருக்குத் தெரியாத இரகசியமாகும். இதைத் தெரிந்தவரும் துணிந்து சொல்லக் கூச்சப்படுகின்றனர். அந்தக் காரணம், அந்த இரகசியம் என்ன வென்றால் புராணத்துக்குப் பயன் சொல்வதால் வருவாய் கிடைக்காது என்பது தான்.

இதை வெளிப்படையாகச் சொல்லப் பலர் கூச்சப்படுவதற்கும் ஒரு காரணம் உண்டு. சில வருடங்களுக்கு முன் பொருள் வசதி படைத்த பலர் வருவாயைப் புறக்கணித்துப் பயன் சொல்லி மகிழ்ந்து தம் பொழுதைத் தவப்பொழு தாக்கியிருக்கின்றனர். இதனால் பயன் சொல்பவர் வருவாயை எதிர் பார்த்தலாகாது என்று சிலர் நம்பினார்கள். இதனால் வந்த கேடு இது.

இன்று பாருங்கள் கொடியேற்றும் குருக்கள் ஒருவருக்கு, கலியாணச் சடங்கு செய்யும் ஒருவருக்கு, செத்த வீட்டுக் கிரியை அந்தியேட்டி, என்பன செய்பவருக்கு, அதிகம் போவானேன் குறிப்புப் பார்த்து விவாகப் பொருத்தம் வேறு பலன் சொல்லும் ஒருவருக்கு, மணித்தியால அடிப் படையில் வருவாய் கிடைக்கிறது. வருவாய் கிடைப் பதால் இப்படியான செயல்களுக்குப் பலர் உருவாகின்றனர். புராணத்துக்குப் பயன் சொல்வ தாயின் அதற்கு ஆயத்தமாகவே ஒருவருக்குக் கணிச மான காலம் வேண்டும். பின் பயன் சொல்ல இரண்டு மூன்று மணித்தியாலங்கள் தேவை. இவற்றுக்குக் கிடைக்கும் வருவாயோ மிக மிகச் சொற்பம்.

சில ஆலயங்களில், கோவிலில் வேலை செய்பவர், குருக்களுக்கு உதவியாள், மேளம் முதலியவற்றுக்குத்தான் அதிகம் கொடுக்க வேண்டும். புராண படனத்துக்கும் அதிகம் கொடுக்க முடியுமா என்ற கருத்து நிலவு கின்றது. இந்த நிலையில் புராணபடனம் செய்ய ஆள் கிடைக்காது என்பது உறுதி. யாராவது தமிழ்ப் பண்டிதர்மார், பயன் சொல்ல வல்லவர் இருந்தாலும் அவர்கள் புராண படனத்துடன் தொடர்பு கொள்ள முன்வரார். தமக்கு நேரமில்லை வசதியில்லை என்று கூறித்தப்பி விடுவர். புராண படனம் செய்ய வாசிப்பவருக்கும் பயன் சொல்ப வருக்கும் அதிக வெகுமதி கொடுத்தால் தெரியாத வரும் பயின்று வருவர். இன்றைய நிலையில் திருவாதவூரடிகள் புராணத்தை முறையாக வாசிக்கும் ஒரு இளைஞருக்கு 2000 ரூபா சன்மானம் சூரபன்மன் வதைப்படலத்தில் 100 பாடல்களுக்கு அழகாகப் பயன் சொல்லும் இளைஞருக்கு 3000 ரூபா சன்மானம் என்று அறிவித்தால் பலர் இதில் ஈடுபட முன்வருவர். இதற்கு நம் தமிழ்ச் சமுதாயம் சம்மதிக்காது, ஒதுங்கும் நிலை நீடிக்குமாயிருந்தால் தமிழ் மக்கள் மத்தியில் தமிழை ஒதுக்குபவரே மலிவடைவர்.

இன்று தமிழ் மக்கள் தமிழபிமானம் - தமிழ் விளக்கம் இல்லாதவர்களாய்க் காணப் படுகின்றனர் என விவரம் தெரிந்த பலர் கவலைப்படுகின்றனர். சீனரும் கிரேக்கரும் விஞ்ஞானத்தில் மிக முன்னேறிய நிலையிலும் தம் பழைய இலக்கியங்களில் அபிமானமும் பயிற்சியுமுடையவராய் உள்ளனர்.

அமெரிக்காவிலோ இங்கிலாந்திலோ வாழும் குஜராத்தியர், மராட்டியர், பஞ்சாபியர், தெலுங்கர், கன்னடியர் முதலியோர் தம்மவருடன் தாம் உரையாடும் போதும் வீட்டில் மனைவி பிள்ளை களுடன் தொடர்பு கொள்ளும்போதும் தம் சுய மொழியைப் பயன்படுத்த அவ்விடத்தில் வாழும் தமிழர் தமிழைப் பயன்படுத்துவதில்லை என்று கண்டு கவல்கின்றனர். இது பற்றிப் பாரதியார் குறிப்பிடும்போது நாலு ஐந்து நூற்றாண்டுக ளாக அடிமைகளாக, வாழ்ந்த தமிழருக்கு சுயபுத்தி போய் அடிமைப்புத்தி வந்திருக்கிறது. தமிழனுக்கு அடிமைப் புத்தி இருப்பதால் அவன் மொழியும் நிந்திக்கப்படுகின்றது. உண்மையில் தமிழ் மொழி சிறந்த மொழியே என்கிறார்.

ஆபிரிக்காவில் இருந்து இரு நூற்றாண்டு களுக்கு முன் அமெரிக்கா சென்று குடியேறிய நீக்கிரோக்கள் தங்கள் தாய் மொழியை மறந்து ஆங்கிலத்தில் மூழ்கினர். ஆனால் இன்று அவர்களுக்கு ஆங்கிலமும் சரியாக வரவில்லை. தங்கள் தாய் மொழியும் அவர்களிடம் இல்லை. அவர்கள் தம் இனத் தனித்துவத்தை இழந்து சிறுமைப்படுகின்றார்கள். இது போன்ற சிறுமைக்கு ஆளாகாமல் தமிழர் விழிப்படைந்தால் மேன்மையுறலாம் என்கின்றனர் விவரம் தெரிந்த அப் பெரியோர். எனவே தமிழர், தமிழர் மத்தியில் தமிழைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டும். தமிழ் மொழியில் வழிபட வேண்டும். தமிழ் மொழியின் சிறப்பை அறிய வேண்டும். இப்படிப் பெருமை களைப் பாதுகாத்த நிலையில் வட மொழியை யும் மதிக்கலாம். கற்கலாம், கொண்டாடலாம். தமிழ் மொழி அபிமானம் தமிழ் மொழிப் பயிற்சி தமிழ் மொழி உணர்வு மிகுக! மிகுக!

# அடியார் கூட்டத்தில் சேர்ந்தால் அவன் அருட்பேறு கிடைக்கும்

கி. வா. ஜகந்நாதன்

இறைவனிடம் நமக்கு அன்பு உண்டாக வேண்டும்; அன்னையின் திருநாமத்தை அடிக்கடி கூறவேண்டும்; அப்பெருமாட்டியின் புகழைச் சொல்ல வேண்டும்; அவனைப் பணிந்து வணங்க வேண்டும். தியானிக்க வேண்டும். இப்படிச் செய்தால் நன்மை உண்டு.

இது அநேகமாக யாவருக்குமே தெரிந்தது தான். ஆனால் இவ்வாறு செய்வது என்பதுதான் அரிதாக இருக்கிறது. மனிதனுக்கு அறிவு இருப்பத னால் இவ்வாறு செய்தல் நல்லது என்று தெரிகிறது.

இவ்வாறு செய்கிறவர்களைப் போற்றி வாழ்த்தவும் தயாராக இருக்கிறான். ஆனால் தான் அப்படிச் செய்ய முனைவதென்பதுதான் எளிதாக இல்லை.

அப்போது அவன் என்ன செய்ய வேண்டும், அந்த நல்ல செயல்களைச் செய்பவர்கள் சங்கத்தில் சேர்ந்து கொண்டால் அவன் எதை நல்லது என்று இதுவரையில் நினைத்து வந்தானோ அதைச் செய்கையிலும் காட்ட முற்படுவான்.

சங்கம் அல்லது சார்பினால் உண்டாகும் நன்மை இது. அதனால்தான் பெரியவர்கள் நல்லோர்கள் இணக்கம் வேண்டுமென்று அடிக்கடி சொல்கிறார்கள்.

"சான்றோர் இனத்திரு" என்று ஔவைப் பாட்டி போதித்தாள். பெருங்கூட்டத்தில் அகப்பட்டுக் கொண்டவன் தானாக நடக்க முடியாவிட்டாலும் அந்தக் கூட்டமே அவனைத் தள்ளிக் கொண்டு போய்விடும். இது எப்படி உடம்பைப் பொறுத்த வரையில் உண்மையோ அப்படியே நல்ல எண்ணங்களை உடையவர் களின் கூட்டத்தில் சார்ந்தால் நம் மனத்தில் நல்ல எண்ணங்கள் தோன்றும்.

அடியார்களின் நடுவில் இருந்து நலம் பெறுவது எல்லோருக்கும் கிடைக்கும் பேறு அன்று. அதற்குப் புண்ணியம் செய்திருக்க வேண்டும். இறைவன் திருவருளால் சத்சங் கத்தில் சேரும் வாய்ப்புக் கிடைக்கும்.

அன்பர்களுடன் கூடி அவர்களுக்குப் பணிசெய்யும் பாககியம் எனககுக கிடைத்துவிட்டால் போதும். நான் மோட்சத்தைத் தேடிக் கொண்டு போக வேண்டிய அவசியம் இல்லை. அதுவே என்னைத் தேடிக் கொண்டு வந்துவிடும் என்று தாயுமானவர் பாடுகிறார்.

**'அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டு விட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே.'** மாணிக்கவாசகரும் இப்படிச் சொல்கிறார்.

'உன்னிடையே அம்பிகை இருக்கிறாள். அவளுடன் நீ இருக்கிறாய், நீங்கள் இருவரும் என் உள்ளத்தே எழுந்தருள வேண்டும். நான் தனியாக இருந்தால் அந்தப் பேறு எனக்குக் கிடைக்காது. நான் அடியார்கள் நடுவுள் இருந் தால் நீங்கள் என்னுள் இருப்பீர்கள். ஆகவே அடியேன் அடியார் நடுவில் இருக்கின்ற அருளை வழங்க வேண்டும்' என்று இறைவனை வேண்டுகிறார்.

**'உடையாள் உன்றன் நடு இருக்கும்**
**உடையாள் நடுவுள் நீ இருத்தி**
**அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால்**
**அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும்**
**அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம் முடியா முதலே**
**என் கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே'**

இவற்றையெல்லாம் நன்கு அறிந்தவர் அபிராமிப்பட்டர். அவர் முற்பிறவியில் செய்த

புண்ணியத்தின் பயனாக அம்பிகையை உபாசிக்கும் பேறு கிடைத்ததை முன் பாட்டில் சொன்னார்.

அந்தப் புண்ணியம் எப்படிப் பலித்தது என்பதை இப்போது எண்ணிப் பார்க்கிறார். குழந்தைக்கு நலம் செய்ய வேண்டுமென்று எண்ணிய தாய், தந்தையர் இருவரும் ஒருங்கே வந்து அருள்வது போல அம்பிகையின் திருவருள் விளைந்ததாம். தம் அருளை வழங்குவதற்கு முன் அன்னையும் அப்பனும் தம் பக்தனுக்கு அடியார்களின் நடுவிலிருக்கும் நிலையை உண்டாக்குகிறார்கள்.

தண்ணீரைத் தேக்குவதற்கு முன் வரப்புகளை அமைப்பது போலச் சத்சங்கத்தில் கூடி நிறகப் பண்ணுகிறார்கள். முன்னே அன்பு மட்டும் இருந்தது. இப்போது அதற்குரிய செயல்கள நிரம்பின. சிறிதளவு உள்ள குற்றமும் போய் விட்டது. இவனுக்கு நாம் தரும் செல்வம் அருமையானது. அதை இவன் தனியே இருக்கையில் கொடுத்தால் அது திருட்டுப் போனாலும் போகலாம். ஆதலால் பாதுகாப்பான இடத்தில் இவனை வைத்துப் பிறகு அந்தச் செல்வத்தை அளிக்கலாம் என்று எண்ணுவாரைப் போல அன்னையும் அப்பனும் செய்கிறார்கள்.

அன்பனுடைய மனதுக்குக் கோசரமாகும்படி அழகிய திருவுருவம் அவ்விருவரும் கொண்டு வருகிறார்கள். பொறிகளுக்கு எட்டாமல் மனதுக்கும் வாக்குக்கும் தட்டுப்படாமல் நிற்கும் பரம இரகசியப் பொருள் கருணையினால் அன்பன் இருக்கிற இடத்துக்கு வருகிறது.

அன்னையாகவும், அவளுக்குத் துணையாக வருகிற கணவராகவும் வடிவெடுத்து வருகிறது. அவன் மனத்தில் தியானப் பொருளாக எழுந்தருளுகிறது. அப்போது அன்னையின் கண்ணில் அருள் கொப்பளிக்கிறது. அப்போது தான் அலர்ந்த நீலோற்பல மலரைப் போல அது விளங்குகிறது.

அன்னையின் அருகில் உள்ள அப்பன் செம்மை நிறத்தோடு கண்ணைக் கவரும் அழகனாக எழுந்தருளியிருக்கிறான். இவ்வாறெல்லாம் கோலம் பூண்டு வருவது அன்பர்கள் தியானம் செய்வதற்குரிய வடிவு கொள்ள வேண்டும் என்பதற்காக, அடியார்களுக்காக அவர்கள் காரணமாகவே அவர்கள் மாயாமயமான இந்தப் பிரபஞ்சத்தில் இறங்கி மனத்தில் புகுகிறார்கள்.

புதுப் பூங்குவளைக் கன்னியும் செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால் நன்னி இங்கே வந்து இவ்வாறு வந்தவர்கள் தம் அன்பன் தலை மேல் தம் பத்மபாதத்தைப் பதித்து இன்பம்தர விரும்புகிறார்கள். ஆனந்த அநுபூதியை வழங்கத் திருவுள்ளம் கொள்கிறார்கள். ஆனால் அதற்கு ஏற்ற பக்குவம் அவனுக்கு வேண்டுமே, அந்த நிலையைப் பாதுகாக்க வேண்டுமே. அதற்காக அவனை ஒரு கோட்டைக்குள் கொண்டு போய் வைத்துப் பிறகு அந்தச் சிறப்பைத் தந்தால் பறி போகாமல் காக்க முடியும்.

இதனை எண்ணி அடியார்களின் கூட்டமாகிய கோட்டைக்கு நடுவே அன்பனை இருக்கும்படி பண்ணுகிறார்களாம். அதாவது சத்சங்கமே இறைவியின் திருவருளால் தான் ஏற்படுகிறதாம். ஒரு பொருளை ஒருவருக்கு வழங்குபவர்கள் அதை வாங்கிக் கொள்ளுகிறவர் நன்றாக அனுபவிக்கத் தக்க வகையெல்லாம் செய்வது சிறப்பு.

ஆதலால் அன்னையும் அப்பனும் உரிய பாதுகாப்பான இடம் இதுவென்று அவனை அடியார்கள் நடுவில் இருக்கப் பண்ணி அப்பால் அவன் தலை மேல் தம் பத்மபாதத்தைப் பதிக்கிறார்கள்.

இறைவன் திருவருளால் நல்லோர் இணக்கம் அமைந்து அந்தச் சார்பினால் இறைவன் திருவருட்பதிவும் அதனால் ஆனந்த அனுபவமும் ஒருவனுக்கு உண்டாக வேண்டும்.

Registered as a News Paper at the G.P.O
Regd No. QD/71/News 2007

# சந்தேகம் தெளிதல்

*- திருமுருக கிருபானந்த வாரியார்*

**கேள்வி :** கர்மா என்பதன் முழு விளக்கத்தைத் தயை கூர்ந்து எழுதுமாறு வேண்டுகின்றேன்.

**பதில் :** கர்மா என்றாலும் வினை என்றாலும் ஒன்று. நம்முடைய மதத்தின் அடிப்படையான, அசைக்க முடியாத உண்மைகள் நான்கு. செய்வான், செய்வினை, வினைப்பயன், சேர்ப்பான் என்பவை.

1. செய்வான் : ஆன்மா.
2. செய்வினை : ஆன்மாக்கள் செய்த வினை.
3. வினைப்பன் : செய்த வினையால் விளையும் பயன்கள்.
4. சேர்ப்பான் : வினை ஜடம். ஆதலினால்செய்த வினை செய்தவன் போல் தானே வந்து பொருந்த மாட்டாது. ஆகவே முழுதொருங் குணர்ந்த இறைவன் அவரவர்கள் செய்த வினைப்பயனைக் காலமறிந்து இடமறிந்து ஊட்டுகின்றான்.

செய் வினையும் செய்வானும் அதன்பயனும் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள் ...

*– சேக்கிழார்*

வினை, நல்வினை, தீவினை என இரண்டு பிரிவுபடும். அன்றியும், ஆன்மாக்களாகிய நாம், இப்பொழுது செய்கின்ற வினை ஆகாமியம் எனப்படும். இறைவனாகிய நீதிபதி தீர்ப்புக் கூற இப்பிறப்பில் நுகர்ந்து கொண்டிருப்பது பிராரப்தம். பக்குவப்படாமல் வரும் பிறப்புகளில் நுகர்வதற்கு இருப்பாக இருப்பது சஞ்சிதம்.

ஞானியர்கள் தன் செயல் இன்றி எல்லாம் ஈசன் செயல் என்று நிற்பதால் ஆகாமியம் விளையாது. பிராப்தம் உடல் ஊழாக நுகர்ந்து முடியும். சஞ்சிதம் ஞானக்கினியினால் வெந்து சாம்பலாகும். இவ்வாறு வினை நீக்கப்பெற்ற முக்தான்மாக்கள்சிவமாம் பெற்றி பெறுவர்.

இராமகிருஷ்ணர் பரமஞானியாக இருந்தும் தனக்கு வந்த நோயை அவர் விரும்பியிருந்தால் விலக்கிக் கொள்ள முடியும். அவ்வாறு விலக்காமல் உடம்பு நு கரட்டும் என்று ஏற்றுக் கொண்டார்.

சதாசிவ பிரமேந்திராள், தனது கால் புண்ணில் இருந்த புழுக்கள் கீழே விழுந்த போது அதைப் புண்ணில் வைத்து, 'உன் கர்மாவை நீ அனுபவித்துக் கொள்' என்று கூறினார்.

**இவ்விதழ்**
**சைவநந்தி நிறுவனத்தினரால்**
**மெய்கண்டான் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது**